# சத்திய வேத பாதுகாவலன்

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams: "CATHOLIC PRESS", JAFFNA.
Telephone: No. 100.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

81-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1956-ம் ஆண்டு மார்கழிமாதம் 6-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 48-ம் இலக்கம்


## சுதேச வர்த்தமானம்

### கிராமச்சங்கத்தின் கண்டனம்

"கன்னிமரியாயின் நடத்தை" என்பதுபோன்ற ஏனையசமயங்களைத் தூஷிக்குமநூல்களும், பிரசுரங்களும வெளியிடப்படுவதைக் கண்டித்தும், வருங்காலத்தில் இத்தகையநூல்கள், பிரசுரங்கள் வெளியிடப்படாவண்ணம் அரசாங்கம் ஏற்றநடவடிக்கை எடுக்கவேண்டுமெனக்கேட்டும் மானிப்பாய்க் கிராமச்சங்கம் ஓர்பிரேரணையை நிறைவேற்றியிருக்கிறது. இப்பிரேரணையை நிறைவேற்றிய கிராமச்சங்க கூட்டத்துக்கு அதன்தலைவர் முதலியார் வி. மகேசன்அவர்கள் தலைமை வகித்திருந்தார்.

### மாபெரும் கண்டனபவனி

இலங்கையின் கடற்படை, ஆகாயப்படைத்தளங்களிலிருந்து பிரித்தானிய படைகளை வெளியேற்றுவதானது, இத்தீவின்பாதுகாப்புக்கு ஆபத்தை உண்டுபண்ணுமாதலால் அதையிட்டு எதிர்பேசுமாறு இம்மாதம் 16-ந்திகதி ஞாயிறன்று சுதந்திரலங்கா சாம்பிராச்சியகட்சியின் தலைவரான திரு. டாக்ளஸ் சேனநாயகா அவர்கள் சிங்கள தேசியவாதிகள், சகலசமயங்களையுஞ் சேர்ந்த குரவர்களுக்குத் தலைமைதாங்கிக் கோல்பேஸ்கிறீனுக்கு மாபெரும் ஆட்சேபபவனி செல்லவிருக்கின்றார். இந்த ஆட்சேபபவனியிலும், அதன்மேல் நடைபெறும்கூட்டத்திலும் கலந்துகொள்ளவிரும்பும் உண்மைத் தேசாபிமானிகளுக்கெல்லாம் அவர் ஓர் அழைப்பு விடுத்திருக்கின்றார்.

### கண்டத்தில் சிக்கியமீன்

எல்பிட்டியிலே சென்றவியாழக்கிழமைபிற்பகல் டபிள்யு. ஏ. பொடிசிங்கோஎன்ற கிராமவாசிஒருவன் அன்று இராப்போசனத்துக்கென்று தனது காய்கனித்தோட்டத்தில் சிலவள்ளிக்கிழங்குகளைக் கிண்டிஎடுத்தபின் சில மீன்களைப் பிடிப்பதற்காகத் தன்னுடையவீட்டுக்குச் சமீபமாயிருந்த நீரோடைக்குச்சென்றான். அங்கே அவன் ஓர்மீனைப்பிடித்து, அதனைத் தனதுபற்களால் தூண்டிலிலிருந்து திருகிஎடுக்கமுயன்றபோது, மீன் அவனுடையவாய்க்குள்நழுவித் தொண்டைக்குள் இறங்கி அவனைமூச்சடைக்கச் செய்துவிட்டது. உடனே அவன் எல்பிட்டி ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டு அங்கே முதல்உதவி அளிக்கப்படுமுன் இறந்துபோயினன்.

### பாடசாலைப் பணிஸின் செலவு

பாடசாலைகளுக்கு வழங்கப்படும் பணிஸ்செலவெல்லாம் இனிமேல் வித்தியாஅதிகாரிகள்மூலம் போறணைகாரருக்கு உதவப்படுமென்று கல்விமந்திரி காரியாலயம் தெரிவித்திருக்கிறது. அதனால் கல்விப்பகுதியின் தலைமைக்காரியாலயத்தாலே அது வழங்கப்படவேண்டுமென்று முன்னர்செய்யப்பட்டிருந்தஒழுங்கு நடைமுறைக்கு வரமாட்டாது.

### வாழ்க்கைச் செலவுப்புள்ளி

சென்றகார்த்திகையிலே இலங்கையில் வாழ்க்கைச்செலவுப் புள்ளித்தொகை முந்தியஐப்பசிமாதம் 101·3ஆகவிருந்து 101ஆகக் குறைந்திருக்கிறது. சென்றமாதத்திலே மிளகாய், ஈரவெங்காயம், பம்பாய்வெங்காயம், உருளைக்கிழங்கு, புடவைஆதியவற்றின் விலைகள் ஏற்றமடைந்துள்ளன. ஏலாதி, எலுமிச்சம்பழம், மீன், புகையிலை ஆதியவற்றின் விலைகள் இறங்கியுள்ளன.

### முப்பதுவிகிதமான கப்பல்கள்

வழமையிலே கொழும்புத்துறைமுகம கண்டுசெல்லும சாமான்கப்பல்களில் நூற்றுக்கு 30 விகிதமானவைகள் தற்போது அங்குவருவதில்லை. கொழும்புத்துறைமுகத் தொழிலாளரிடையே ஏற்பட்டுள்ள குழப்பமானநிலையும், சுவெஸ்கால்வாய்ப் பிரச்சினையுமே இதற்குக் காரணமென்று சொல்லப்படுகிறது. துறைமுக வேலைநிறுத்தங்களைத் தடைசெய்ய உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படாவிடின் ஏற்றுமதிசெய்கிறவர்கள் வெகுவாகப் பாதிக்கப்படுவார்களென வர்த்தகவட்டாரங்கள் கருதுகின்றன.

### புதியசீமேந்துத் தொழிற்சாலைகள்

காங்கேசன்துறையிலுள்ள சீமெந்துத் தொழிற்சாலைபோன்று மேலும் இரண்டுபெரிய சீமெந்துத்தொழிற்சாலைகளைப் புத்தளத்திலும், அம்பலாங்கொடையிலும் அமைக்கும்படியாக அரசாங்கம் கைத்தொழில்மந்திரிக்கு அனுமதியளித்திருக்கிறது. அதனால் கைத்தொழில்மந்திரி இருபுதிய சீமெந்துத்தொழிற்சாலைகளையும் கூடியவிரைவிலே அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்துவருகின்றார். அரசாங்கம் முதலில் ஒரேயொரு சீமெந்துத் தொழிற்சாலையையே அமைப்பதுபற்றிப் பரிசீலனை செய்தது. ஆனால், இலங்கைச்சீமெந்தின் உற்பத்தியைப் பெருக்கிப் பிறநாட்டுச்சீமெந்தின் இறக்குமதியைநிறுத்த ஒருபுதியசீமெந்துத் தொழிற்சாலை போதாதென்று கண்டறியப்படலாயிற்று.

### அடைமழையும் வெங்காயமும்

சிலதினங்களாகப் பெய்துவரும் அடைமழை காரணமாக வேலணைக் கிராமத்திலும், அதன் சுற்றுப்புறங்களிலுமுள்ள அநேக வெங்காயத்தோட்டங்கள் சேதமடைந்திருப்பதாகத் தெரியவருகிறது. வறிய கமக்காரர் பலர் இம்முறை என்றுமில்லாதவிதமாய் மிகுந்த பிரயாசையெடுத்துப் பெருந்தொகைப்பணம் செலவிட்டு வெங்காயஞ் செய்கைபண்ணினார்கள். ஆனால், தங்கள் வெங்காயத்தோட்டங்கள் சேதமடைந்ததையிட்டுப் பெரிதும் ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள்.

### வேலையில்லாதோர்தொகை

இலங்கையிலே வேலைகிடையாதிருப்பவர்களினதும்; மேலும்உயர்ந்த வேலை தேடிக்கொண்டிருப்பவர்களினதும்தொகை சென்றபுரட்டாசியிலே 84,343போராக மேலும்அதிகரித்திருப்பதாய்க் கார்த்திகைக்கான இலங்கைத் தொழில்வர்த்தமானி தெரிவித்திருக்கிறது. இது முன்னொருபோதுமே இல்லாத மிகக்கூடியதொகையாகும். சென்றதைமாதத்திலே 74,186போராயிருந்த இவர்களின்தொகை ஏறக்குறைய மாதந்தோறும் படிப்படியாக அதிகரித்துச் சென்றபுரட்டாசியில் 84,343போராகியிருக்கிறது.

### பட்டினசபைகளின் தேர்தல்கள்

சென்றசனிக்கிழமை நடைபெற்ற சிலாபப் பட்டினசபைத் தேர்தலிலே அதன் பதினொரு வட்டாரங்களிலும் ஏழுவட்டாரங்களுக்கு ஐக்கியதேசியக் கட்சி அபேட்சகர்களும், மூன்றுவட்டாரங்களுக்குப் புதிதாக ஆக்கப்பட்ட ஜனஹிதகட்சி அபேட்சகர்களும், ஒரு வட்டாரத்துக்குச் சுயேச்சை அபேட்சகரும் தெரிவுசெய்யப் பட்டிருக்கிறார்கள்.

மாத்தளைப் பட்டினசபைத் தேர்தலில் எல்லாவட்டாரங்களுக்கும் சுயேச்சை அபேட்சகர்களே போட்டியிட்டமையால் எல்லோருஞ்சுயேச்சைவாதிகளாகவே தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார்கள்.

மட்டக்களப்புப் பட்டினசபைத்தேர்தலில் கட்சியில்லாமலே அபேட்சகர்கள்போட்டியிட்டார்கள். அதில் ஒருவரைத்தவிரத் தற்போதைய அங்கத்தவர்கள் அனைவருமே தோல்வியடைந்தார்கள்.

இரத்தினபுரிப் பட்டினசபைத்தேர்தலில் அதன் பதினொருவட்டாரங்களிலும் எட்டுவட்டாரங்களுக்கு மக்கள் ஐக்கியமுன்னணிக்கட்சி (எம். ஈ. பி.) அபேட்சகர்களும், மூன்றுவட்டாரங்களுக்குச் சுயேச்சைஅபேட்சகர்களும் தெரிவுசெய்யப் பட்டிருக்கிறார்கள்.

ஹற்றன் பட்டினசபைத் தேர்தலில் ஏழு வட்டாரங்களுக்கும் சுயேச்சை அபேட்சகர்களே தெரிவுசெய்யப் பட்டிருக்கிறார்கள். ஏழாம்வட்டாரத்தில் அபேட்சகர்களாகப் போட்டியிட்ட இருவருக்கும் தனித்தனி 31 வாக்குகள் கிடைத்தமையால் பூவா, தலையா என்று போட்டுப்பார்த்ததில் திரு. என். கனகரத்தினம் தெரிவுசெய்யப்பட்டார்.

### கொலைகளும் விபத்துமரணங்களும்

இவ்வருடத்திலே கார்த்திகைஈறாகவுள்ள பதினொருமாதங்களிலும் இலங்கையில் வீதிவிபத்துகளாலும், கொலைகளாலும 700பேர் உயிர்இழந்திருக்கிறார்கள். இவற்றிலே கொலைகள் 433. வீதிவிபத்து மரணங்கள் 267. சென்ற கார்த்திகையில்மாத்திரம் 31 கொலைகளும், 19 வீதிவிபத்துமரணங்களும் நிகழ்ந்திருக்கின்றன. கார்த்திகைக் கடைசிநாளன்று பண்டாரவளையிலே இருவரும் றுகமத்திலே ஒருவரும் குத்திக்கொலைசெய்யப்பட்டிருக்கிறார்கள். சுன்னாகத்திலும், பம்பலப்பிட்டியிலும் சைக்கிள்களில் சென்றஇருவர் கார்களால்இடறுண்டு உயிரிழந்திருக்கின்றனர்.

---

● ஐக்கியநாடுகளின் சர்வதேசப் படையிலே மொத்தமாக 6,000 இராணுவவீரர்கள் இருந்துவருவார்கள். இன்னும்இருவாரங்களில் சுமார்4,100 வீரர்கள் எகிப்துபோய்ச் சேர்ந்துவிடுவார்கள். அதாவது இன்னும் 15தினங்களிலே ஐக்கியநாடுகளின்படைகள் சகலஅம்சங்களுமுள்ள ஓர்இராணுவமாகிவிடும். இதற்கு ஜெனறல்பேண்ஸ் பிரதமசேனாதிபதியாய் இருப்பார்.

● சோவியற்படைகளின் கொடுமைகளுக்காற்றாது தங்கள் சுவநாட்டை விட்டு வெளியேறிய ஹங்கேரியஅகதிகளுள்ளே ஐயாயிரம்பேரை ஆஸ்திறேலியா ஏற்றுக்கொள்ள முன்வரலாயிற்று. இவர்களிலே முதலாவது கோஷ்டியைச்சேர்ந்த 90 பேர் ஆஸ்திறேலியாவுக்குச் செல்லும்வழியிலே சென்ற 2-ந் திகதியன்று கரைச்சிவந்து சேர்ந்திருக்கிறார்கள்.

● அயர்லாந்திலே டபிளின் நகரிலுள்ள சென் வின்சென்ற் கிளப்பின் வெள்ளியூபிலிவிழா சமீபத்தில் கொண்டாடப்பட்டபோது அந்தக்கிளப்பைச் சேர்ந்தவர்கள் ஹெர்லிங்ஆட்ட, உதைபந்தாட்டங்களில் வெற்றிபெற்றமெடல்களைக்கொண்டு நற்கருணைப் பாத்திரம் ஒன்றுசெய்து 25 வருடங்களின்முன் அந்தக்கிளப்பை அடியிட்ட வண. டபிள்யு. பிற்ஸ் பற்றிக் சுவாமியாருக்கு அன்பளிப்புச்செய்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்கரும் தருமசேவையும்

(பி. சவிரிமுத்து, முன்னைநாள் தனிச்சங்க காரியதரிசி)

நம்முடைய திவ்வியகர்த்தராகிய யேசுக்கிறீஸ்துநாதர் தமது சீவிய காலத்தில் போதித்தருளிய இரண்டு முக்கியகற்பனைகள் உள. அவைகள் தேவசிநேகமும், பிறர்சிநேகமுமாகும். பிறர்சிநேகம்இல்லாத மக்களிடம் தேவசிநேகம் இருக்கமுடியாதுஎன்பது மிகையாகாது.

யேசுக்கிறீஸ்துநாதரின் அப்போஸ்தலரும் தங்கள் சீவியகாலத்தில் தருமத்தைப்பற்றி இடையருமல் போதித்து வந்திருக்கின்றனர். அதைத் தங்கள் சாதனையிலும் சிறப்பாகக் காட்டியிருக்கின்றனர்.

அநேக அர்ச்சியசிட்டர்களின் சீவியசரிதையை நாம் வாசிக்கும்போது அவர்களில் தேவசிநேகமும், பிறர்சிநேகமும் ஒளிவிட்டு விளங்கியமை நன்குபுலப்படுகிறது. அவர்களின் வாழ்க்கைவரலாறுகளை வாசித்த எவரும் "தருமசிந்தையில்லாத ஒருவனுக்கு இரட்சணியம் இல்லை"என்பதை நன்குஉணரமுடியும்.

எமது தாய்ப்பாஷையாகிய தமிழிலும் "தருமம் தலைகாக்கும்" என்னும் பொன்மொழிகள் தருமத்தின் முக்கியத்துவத்தை வற்புறுத்துகின்றன. பொய்யாமொழிப் புலவராகிய திருவள்ளுவரும் தமது குறட்பாவில் "அன்பிலாரெல்லாம் தமக்குரியர் **அன்புடையார் என்பும்உரியர் பிறர்க்கு**" என்று தருமசிந்தையின் மகத்துவத்தைப் போற்றிப்புகழ்ந்திருக்கிருர்.

மனிதர்களைத் தவிர்த்து மற்றைய சீவபிராணிகளை நாம் உற்றுஅவதானித்தால் அவைகள் எவ்வளவோ பிறர்நேசமுடையனவாகக் காட்சியளிக்கின்றன. நம்மைச்சூழவரவுள்ள விலங்குகளையோ, அன்றேல் பறவைகளையோ, விருட்சங்களையோ நாம் உற்றுநோக்குவோமாகில், அவைகள் பிறர்சிநேகத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கின்றன.

ஆடுமாடுகள்போன்ற மிருகங்கள் பால், மாமிசம் முதலியனவற்றை நமக்குத் தருகின்றன. கோழி, தாரா முதலியபறவைகளும்முட்டை, மாமிசம் முதலியனவற்றைத் தந்துதவுகின்றன. மரங்களும் நமக்குவேண்டிய கனிகளைத்தருகின்றன. வாழை, மா, பலாபோன்றமரங்களின்விசேஷ இலட்சணத்தைப் புலவர்கள்பலர் போற்றிப் பாடியிருக்கின்றனர். அஃதெவ்வாறெனில், "நின்றுபயனுதவி நில்லாவரம்பையின்கீழ் கன்றுமுதவுங்கனி" என்ற அடியில் கூறப்பட்டுள்ளபடி நன்மைசெய்வதால் தீமை ஒருவருக்கு வந்தபோதிலும் நன்மையைத் தொடர்ந்துசெய்வதே பெரியோரின்தன்மைஎன்னும் உண்மையை வாழைமரம் போதிக்கின்றது. மாமரமும் அவ்வாறேஎன்பதை உணரக்கூடியதாயிருக்கிறது. விருட்சங்கள் நமக்கு இதிலும் மேலான ஒருபணியைச் செய்கின்றன. அதாவது, நமக்குத் தீமைவிளைக்கக்கூடியதும், நச்சுத்தன்மை பொருந்தியதுமான கரியமிலவாயுவைத் தாங்களே உட்கொண்டு நமக்குப் பெலமும், ஆரோக்கியமும் தருகின்ற பிராணவாயுவை வெளியேற்றுகின்றன. இந்தமரங்களின் வாழ்க்கையிலிருந்து நாம்அறியக்கூடிய ஒருபெரிய உண்மைஉண்டு. அதாவது, பிறருக்குவரும்தீமைகளை நாங்கள்விலக்கி அவர்களுக்கு நன்மைஏற்படக்கூடிய முறையில் நாம் வாழவேண்டும் என்பதுதான்.

அநேக அர்ச்சியசிட்டர்களின் வாழ்க்கை பெரும்பாலும் வறியோருடையவும், நோயாளிகளுடையவும் நன்மைக்காகவே செலவிடப்பட்டிருக்கிறதுஎன்பது அவர்கள்சரித்திரத்தில் வாசித்தறியக் கிடக்கிறது. என்றாலும், ஒருசிலரின்வாழ்க்கையில் நடந்தசம்பவங்களை இங்குகுறிப்பிடுவோம்.

**அர்ச். சிசிலியம்மாள்:** தான் மரிக்குமுன் தனது ஆஸ்திபாஸ்தி யாவற்றையும் தரித்திரருக்கு அளித்ததாக நாம் வாசிக்கிறோம்.

**அர்ச் கிறிஸ்தோப்பர்:** தமதுவாழ்க்கையைப் பிறருடைய நன்மைக்காகவே செலவளித்தார். ஓர் ஆற்றோரத்திலிருந்து அவ்வாற்றைக்கடக்க வந்தோரை மற்றஓரத்துக்குக் கொண்டுபோய் விடுவதே அவருடைய சமூகசேவையாயிருந்தது.



**அர்ச். வின்சென்ற் டீ போல்:** இவரது வாழ்க்கையை எல்லோரும் நன்கறிவர். பரீஸ்பட்டணத்திலுள்ள தரித்திரரின்நன்மைக்காகத் தமது சீவியத்தை இவர் செலவழித்தார். இவரே கத்தோலிக்க தருமசபைகளின் (சென்வின்சென்ற் டீபோல் சபை, தருமசீமாட்டிகள்சபை) பாதுகாவலராக விளங்குகிருர்என்பதை அநேகர்நன்கு அறிவர்.

**அர்ச். பெரியகிறகோரியார்:** ஒருசமயம் பஞ்சம்ஏற்படக்கூடிய அபாயநிலையிலே இத்தாலியதேசம் இருந்தபொழுது இவர் எகிப்துதேசத்திலும், சிசிலிதீவிலும் உற்பத்திசெய்யப்பட்ட தானியம்முழுவதையும் விலைக்குவாங்கி ரோமாபுரியில் சேர்த்துவைத்ததாகவும், பஞ்சம்ஏற்பட்டபொழுது வறியோரின்நாமாவலிஒன்றுதயாரித்து வரிசைக்கிரமப்படி அவர்களுக்குத் தானியம் விநியோகம்செய்ததாகவும் அவருடைய சீவியசரிதையில் வாசிக்கிறோம்.

**எகிப்துதேச அர்ச். அந்தோனியார்:** மத்தேயு XIX அதி. 21-ம் வசனத்தில் குறிப்பிடப் பட்டுள்ளபடி, இவர் தமது காணிபூமிகளைஎல்லாம் விற்றுத் தரித்திரருக்குக் கொடுத்ததாக இவருடைய சரித்திரத்தில் நாம் வாசிக்கிறோம்.

**சந்நீக்கிலாமுனியோரின்** வாழ்க்கையில்நடந்த ஒருசம்பவம் மிகவும் விசித்திரமானது. பத்தாருநாட்டிலிருந்தஒருவருக்குப் பிராயமடைந்த மூன்றுகுமர்ப்பிள்ளைகள் இருந்தனர். முட்டுப்பாட்டின் நிமித்தம் சீதனம் கொடுத்து அவர்களை மணமுடித்து வைக்க முடியாதநிலையிலிருந்த அவர் மிகவும் அல்லலுற்றுர். இதைக் கேள்விப்பட்ட சந்நீக்கிலார் ஒருநாள் தங்கக்காசுகள்நிறைந்த ஒருபணமுடிப்பை அந்தமனிதரின் வீட்டு யன்னலுக்கூடாக அறைக்குள்எறிந்தாராம். அதைக்கொண்டு அவர் தனதுமூத்தமகளுக்கு மணஞ்செய்துவைத்தாராம். அவ்வாறே இரண்டாம்மகளையும், மூன்றும்மகளையும் சந்நீக்கிலார் மீண்டும்மீண்டும் செய்த உதவியோடு அவர் மணஞ்செய்துவைத்ததாக வாசிக்கிறோம்.



**அர்ச். மர்த்தீனுரின்** வாழ்க்கையில் நடந்த ஒருசம்பவம் இன்னுமதிக வியப்பிற்குரியது. அவர் ஒருகுதிரையில் சவாரிசெய்துகொண்டிருக்கும்பொழுது, குளிரால்வாடிக் கஷ்டப்படும்ஒருதரித்திரனைக் கண்ணுற்றுர். அவன் அவரிடம் தருமங்கேட்டான். "உன்னைப்போல் உன்அயலானையும் நேசி"என்ற நமது திவ்வியகர்த்தரின் திருமொழிகள் அவருடைய ஞாபகத்திற்கு வந்தன. கையில் சொற்பபணமும் இல்லாமையால் அவர் தமதுவாளால் தம்முடைய போர்வையையே இரண்டாக வெட்டி ஒருதுண்டை அவ்வேழைக்குக் கொடுத்தார். அன்றிரவு மர்த்தீனுர் நித்திரையாயிருக்கும்போது யேசுக்கிறீஸ்துநாதர் அவர்தருமமாக வழங்கிய அரைவாசிப் போர்வையுடன் சம்மனசுகள்புடைசூழ அவருக்குத்தோன்றினுர். இக்காட்சியின் உண்மையும், கத்தோலிக்க தருமசேவையின் அடிப்படைக்கருத்தும் ஒன்றுதான். அதாவது, நாம்ஏழைகளுக்கு உதவிசெய்யும்பொழுது யேசுக்கிறீஸ்துநாதருக்கே உதவிசெய்கிறோம். ஏனெனில், "இவர்களில் மிகவும்எளியவனுகிய ஒருவனுக்கு நீ செய்ததை எனக்குச் செய்ததாகவே நான் ஏற்றுக்கொள்ளுகிறேன்' என்று யேசுக்கிறீஸ்துநாதர் திருவாய்மலர்ந்திருக்கிருர் அல்லவா?

(வளரும்)

---

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

சதாசகாயமாதாவே! எங்கள்அன்பான தாயாரே! எங்கள் உத்தியோக இடமாற்ற விஷயமாய் உமதுஉதவியைஇரந்து மன்ருடினேம். எங்கள்மன்ருட்டைப் பெற்றுத்தந்தருளினீர். நாங்கள் எங்கள் முழுஇருதயத்தோடு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். இன்னும்நாங்கள்கேட்டுவரும் உதவியையும் எங்கள் பெற்றதாயினும் பேரன்புடையதாயாரே! பெற்றுத்தந்தருளும். என்றென்றும் சதாசகாயமாதாவென்னும்உமதுநாமம்பூமியெங்கும் புகழ்ந்து ஸ்துதிக்கப்படுவதாக.

H. T. & L. T.

## ஹங்கேரிய அகதிகளும் கஷ்டநிவாரணமும்

சோவியற்படைகளின் கோரதாக்குதலாலே கஷ்டநஷ்டங்களுக்குள்ளான ஹங்கேரியமக்களின் கஷ்டநிவாரணத்துக்கென்று 50 லட்சமடலர் பெறுமதியுள்ள உணவு, மருந்து, போர்வைமுதலிய சாமான்கள் அமெரிக்கமக்களாலும், அமெரிக்க அரசாங்கத்தாலும் வழங்கப்பட்டுள்ளன. ஹங்கேரியஅகதிகளின் தேவைகளைப் பொறுத்து அமெரிக்காவிலிருந்து தொடர்ந்து உடனுக்குடன் உதவிக்குமேல்உதவி கிடைத்துக்கொண்டிருக்குமென்று ஜனுதிபதியின் மாளிகை அறிக்கை கூறியிருக்கிறது. அந்த அறிக்கை மேலும் கூறுவதாவது:—
"ஆஸ்திரியாவில் 40,000 ஹங்கேரிய அகதிகள்போய் அடைக்கலம் புகுந்திருப்பதாக மதிப்பிடப்படுகிறது. அதனுல் இன்னும்சிலகாலத்துக்கு ஏராளமான கஷ்டநிவாரணப்பண்டங்களை அனுப்பிக்கொண்டிருக்கத்தான்வேண்டும். ஆஸ்திரியாவுள் ஹங்கேரியஅகதிகள் போனவண்ணமாயிருக்கிருர்கள். ஆகவே, அமெரிக்க அரசாங்கமும், தனிப்பட்ட தருமஸ்தாபனங்களுமாக எல்லாவகையிலும் ஒத்துழைத்து நிவாரணஉதவி அளிப்பதில் மும்முரமாயிருக்கின்றன."

அமெரிக்காவிலிருந்தும், ஏனையநாடுகளிலிருந்தும் இயன்றமட்டும் மிகமிக வேகமாய் மருந்து, போர்வைமுதலான தேவைப்பண்டங்கள் அனுப்பப்பட்டு வருகின்றன. அதற்கிடையில், அமெரிக்கா புகலிடம்அளித்துள்ள 5,000 ஹங்கேரிய அகதிகளில் அறுவர்அடங்கிய முதல்கோஷ்டியை அன்றுபுதன்கிழமை அமெரிக்க அரசாங்க அதிகாரிகள் வரவேற்றுர்கள். அகதிகளுள் குழந்தைகளும், பெண்களும் இருந்தனர். வியன்னுநகர்வழியாக விமானத்தில் இவர்கள் அமெரிக்காபோய்ச் சேர்ந்துள்ளனர். இன்னுமசிலவாரங்களில் 5,000 அகதிகளும் அங்குபோய்ச் சேருவர்.

ஹங்கேரியமக்களுக்குச் சர்வதேச உதவி வழங்குவதைச செஞ்சிலுவையின் சர்வதேசகம்மிற்றி மேற்பார்வை செய்வதை அனுமதிக்கும் ஒருஉடன்பாடு வியன்னுநகரில் கையெழுத்திடப்பட்டது. ஹங்கேரியின் தலைப்பட்டணமாகிய புடாபெஸ்ரிலிருந்து கிடைத்த அதிகாரத்தின்பேரில் வியன்னுவிலிருக்கும் ஹங்கேரியப்பிரதிநிதி இந்தஉடன்பாட்டை அங்கீகரித்ததாகச் செஞ்சிலுவைச் சர்வதேசக் கம்மிற்றியின் அதிகாரி சொன்னுர். சுதந்திரஉலக அரசாங்கங்களும், சர்வதேசஸ்தாபனங்களும் 29,000 ஹங்கேரிய அகதிகளை ஏற்றுக்கொள்ள ஒப்புக்கொண்டுள்ளனஎன்று அகதிகளுக்கான ஐக்கியநாடுகளின் ஹைகமிஷனர் காரியாலயம் அறிவித்துள்ளது. அமெரிக்கா உடனடியாக 5,000 அகதிகளை ஏற்றிருக்கிறது. மேலும் அகதிகளுக்கு உதவ அமெரிக்கா பத்துலட்சம்டலர் அளித்துள்ளது. ஹங்கேரிக்குள்ளே உதவிபுரிய இரண்டுகோடிடலர் வேறு கத்தருவதாக ஏற்கனவே வாக்களித்துள்ளது.

சிந்தியாமல் வேகமாகப் பேசுவது "பிறேக்" இல்லாமல் வண்டியை வேகமாகச் செலுத்துவது போலத்தான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

## யூதரின் குருத்துவபதவி

இத்தாலியிலே மிலான் நகரில் சமீபத்திலே மொன்ரினி அதிமேற்றிராணியாரால் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றவரான வண. லெயோனாட் அட்லர்சுவாமியார் 79 வயதுடைய ஓர்யூதராவர். தமது விருத்தாப்பியவயதையிட்டும், தம்முடையபாரியாரும், மூன்று பிள்ளைகளும் சீவந்தராயிருப்பதையிட்டும் இவர் குருப்பட்டம்பெறுவதற்குப் பாப்பரசரிடமிருந்து விசேஷ இளக்காரத்தைப் பெற்றுக்கொள்ளலாயினர். மிலான்நகரிலே இவர் யூதபெற்றோரிடமிருந்து பிறந்தார். எஞ்ஜினியறிங் பட்டத்துக்கு வீயென்னா நகரில் படித்தார். 1920-ம்ஆண்டு இவர் ஜேர்மனியின் தலைப்பட்டணமாகிய பேர்ளின்நகர போக்குவரத்துத் திட்டம் முழுவதற்கும் பொறுப்பாளியாயிருந்தார். பிந்த அங்கிருந்தும் நாஸிகளுக்குத்தப்பி மிலான்நகருக்கு ஓடிச்சென்று 1948-ம் ஆண்டு அந்நகர திரும்வண்டிச் சேவைக்குப் பிரதம தலைவரானார்.

## நோயாளரின் ஆகாயயாத்திரை

நோய்வாய்ப்பட்டவர்கள் முழுப்பிரயாணத்தையும் ஆகாயவிமானமூலம் நடத்துமாறு ஒழுங்குசெய்யத் தொடங்கியிருக்கும் இயக்கத்தின் முதலாவதுஅமெரிக்க ஆகாயத்திருயாத்திரையில் கலந்துகொண்ட 40பிணியாளர் சமீபத்திலே நியூயோக்நகரிலிருந்து லூர்துபதிபோய்ச் சேரலாயினர். தூக்குங்கட்டில்களில் இருவரும், சில்லுக்கதிரைகளில் நால்வரும்உட்பட இந்தயாத்திரிகர்கள் அங்குபோய்ச் சேர்ந்தபோது லூர்துபதியின் மேயர் அவர்களைவரவேற்றுநின்றார். இரட்சணியமாதா சங்கத்தின் நிர்மாண காரியதரிசியான சங். ஜெரூட் பிறசாட் பிறதர் இந்த யாத்திரைக்குத் தலைமை வகித்தார். 1872-ம் ஆண்டிலே அடியிடப்பட்ட இந்தச்சங்கம் வறியவர்களும், பிணியாளருமாக நூற்றுக்கணக்கான யாத்திரிகர்களை உலகின் அநேக பகுதிகளிலுள்ள திருசேத்திரங்களுக்கு அனுப்பிவைத்துக்கொண்டு வகிறது.

## பிரான்சும் சமயபாடசாலைகளும்

சமயஸ்தாபன பாடசாலைகளுக்கு அரசாங்கம் உதவிப் பணம்வழங்குவதை நீக்கிவிடத் தேடும் இயக்கம்விஷயமாய் விவாதிப்பதில்லையென்று தீர்மானிக்கப்பட்டமையாலே பிரான்சிய தேசியமகாசபையில் அருந்தப்பாகஅவ்விஷயம் நிராகரிக்கப்படலாயிற்று. பிரான்சிலே அரசாங்க பாடசாலைகளிலுள்ள 60லட்சம் பிள்ளைகளுக்கும், பெரும்பான்மையாகக் கத்தோலிக்கபாடசாலைகளைக்கொண்ட பிரத்தியேகபாடசாலைகளிலுள்ள 15லட்சம்பிள்ளைகளுக்கும் வருடம்ஒன்றுக்கு ஒவ்வோர்பிள்ளைக்கும் அரசாங்கம் 4,000பிராங்வரையிலே உதவிப் பணம் வழங்கிவருகிறது. பிரத்தியேகபாடசாலைகளுக்கு உதவிப் பணம் வழங்குவதைநீக்கிவிடுவது பற்றி விவாதிப்பதற்கென்று பிரான்சிய அரசாங்கமகாசபையிலே பலமுறையும் நேரம்குறிக்கப்பட்டிருந்தது. ஆனால், அதிலே ஆவசியகமானவிஷயங்கள் அதிகமாகஇருந்துவருவதுபற்றி இவ்விஷயம் பின்னரும் காலவரையறையில்லாது பின்போடப்பட்டுள்ளது.

## அணுக்குண்டுகளையிட்டல்ல ....

சீனக்கம்யூனிஸ்த சிறைச்சாலை ஒன்றிலே 32மாதங்களைச்செலவிட்ட ஓர்மிஷனரியாகிய வண. அய்டன் மைக்கிருத்சுவாமியவர்கள் இங்கிலாந்திலே மான்செஸ்றர்நகரில் அன்று ஞாயிற்றுக்கிழமை மரியாயின்சேனைச் சமாகமம்ஒன்றில் பேசியபோது: "சீனக்கம்யூனிஸ்தர்கள் அணுக்குண்டையிட்டோ, அல்லது சலவாயுக்குண்டையிட்டோ, அல்லது மற்றெந்தப் பலங்களையிட்டோ அஞ்சுவதில்லை; ஆனால், திருச்சபையையிட்டும், கடவுளை நேசிக்கிறவர்களும், அவரைப்பற்றித் தங்கள்அயலகத்தாரிடம் பேசுவதற்கான சந்தர்ப்பத்தை இழந்துபோகாதவர்களுமான ஆடவர்கள், பெண்மணிகளையிட்டுத்தான் அவர்கள் அஞ்சிக் கலங்கிறார்கள்; சீனாவில்நடைபெறுவது இங்குமே நடைபெற முடியும்; கத்தோலிக்கசமூகத்தினருள் நூற்றுக்குத் 90 விகிதத்தினரும் யாதாமோர் கத்தோலிக்க சேவையில் கலந்துகொள்வதிலே தங்களுக்குள்ள கடமைகளை இன்னுமே உய்த்துணரத் தவறுகிறார்கள்" எனக் கூறலாயினர்.

## வடதுருவக் கோவில்

உலகில் அதிகம்வடக்கே—அதாவது, வடதுருவத்துக்கு அதிகஞ் சமீபமாய் நோர்வேதேச ஹம்மர்பெஸ்ற் பட்டினத்தில் இருந்துவருகின்ற கத்தோலிக்ககோவிலாகிய சம்மிக்கேல் கோவிலானது தற்போது திரும்பக் கட்டியெழுப்பப்படுகிறது. 1945-ம் ஆண்டு ஜேர்மனியர் பட்டினத்தைவிட்டு வலசைவாங்கியபோது, அதனைப் பரிநாசஞ்செய்துவிட்டுப் போயினமையால் இந்தக் கோவிலும் அழிக்கப்படலாயிற்று. இந்தக் கோவிலிலே றோமாபுரியிலுள்ள அர்ச். பேதுருவானவர் கல்லறையிலிருந்து எடுத்துக் கருதினால் கொஸ்ரான்ரினி ஆண்டவரால் அனுப்பிவைக்கப்பெற்ற பார்க்கல்லொன்றும் வைத்துக் கட்டப்படுகிறது. கோவில் சக்கிறிஸ்தையானது ஞாயிறொழிந்த ஏனைய வாரநாட்களிலே திவ்வியபூசை நிறைவேற்றுதற்கான ஓர்சின்னக் கோவிலாக உபயோகிக்கப்படத்தக்கதாய் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. அதனால் வடசமுத்திர குளிரைப்போக்குவதற்காகக் கோவிலை வெப்பமாக்க ஏற்படுஞ்செலவைச் சேமித்துக்கொள்ளலாம்.

## கத்தோலிக்கமாணவரின் விடுதிச்சாலை

பிறநாடுகளைச்சேர்ந்த குருத்துவமாணவர்கள்அல்லாத சாதாரண கத்தோலிக்கமாணவர்கள் தங்கியிருந்து கல்வி பயில்வதற்கென றோமைநகரிலே நான்குலட்சம் டலர்செலவில் புதியதோர் கத்தோலிக்க விடுதிச்சாலையை அமைப்பதற்கான திட்டங்கள் செய்யப்பட்டு வருவதாக "ஒப்புஸ் தே" என்ற லௌகிகஸ்தாபனம் தெரிவித்திருக்கிறது. "சர்வதேச சர்வகலாசாலை விடுதி" என அழைக்கப்படவிருக்கின்ற இதனை அமைப்பதற்கான நிலம் அந்நகரின் சாதாரண பொருட்காட்சிப் பகுதியில் ஏற்கனவே விலைக்கு வாங்கப்பட்டுள்ளது. அதனால், விரைவிலே கட்டுவேலை ஆரம்பமாகவிருக்கிறது. ஓர்சிற்றாலயம், நூல்நிலையம், உடற்பயிற்சிச்சாலை, சபாமண்டபம், படிக்கும்சாலை, வசிக்கும்சாலை ஆதியவைகளை அடக்கியதாய், ஐந்து மாடிகளைக் கொண்ட ஓர் அழகியகட்டடமாய் இது விளங்கும். அன்றியும் உலக முழுவதிலுள்ள கத்தோலிக்க மாணவர்களும், பல்வேறுகலைகளில்சிறந்த கத்தோலிக்க கல்விமான்களும், அவர்களின் குழுக்களும் ஒன்றுகூடி இலக்கியம், விஞ்ஞானமுதலாம் துறைகளில் ஆலோசிக்கும் ஓர் மத்தியநிலையமாகவும் இதுபயன்படும். ஐக்கிய அமெரிக்கதேசத்திலிருந்துபோன இருநூறுபேருக்கு மேற்பட்ட கத்தோலிக்க மாணவர்கள் இப்போது றோமைநகரில் இருக்கின்றார்கள். தற்போதையநிலைமையிலே இவர்கள் நகரின் பல்வேறு பகுதிகளிலும் தங்கியிருக்கிறார்கள்.

## சென்னைக் கத்தோலிக்க கவர்னர்

பம்பாய்இராச்சிய புதியகவர்னராகத் திரு. ஸ்ரீ பிரகாசா அவர்கள் நியமனஞ்செய்யப் பெற்றமையாலே இவரிடமாகப் புதிய கவர்னராக ஓர் கத்தோலிக்கரும், திருவாங்கூர்-கொச்சி இராச்சிய மந்திரிசபையிலே 1949-ம் ஆண்டு முதல் தொடர்ந்து மந்திரிபதவியும், பின்னர் 1952-ம் ஆண்டு பங்குனிமுதல் 1953-ம் ஆண்டு புரட்டாசிவரையிலே முதல் மந்திரிபதவியும் வகித்திருந்தவருமான திரு. ஏ. ஜே. ஜோன்அவர்கள் சென்னை இராச்சியத்தின் புதிய கவர்னராக நியமனஞ் செய்யப் பெற்றிருக்கின்றார். தற்போது 62வயதுடையவரான இவர் வைக்கம்நகருக்குச் ச[illegible]ன ஓர்கிராமத்தில் பிறந்தா[illegible]. எல். பரீட்சையில் அரங்கேறியபின் திருவனந்தபுர உயர்நீதிமன்றத்தில் நியாயவாதியாகக் கடமையாற்றிவருகையில் அரசியலில் ஈடுபட்டு 1922-ம்ஆண்டு திருவாங்கூர்ச் சட்டசபை அங்கத்தவராகத் தெரிவுசெய்யப் பெற்றிருந்தார். இந்தியாவிலே தேசிய இயக்கம் ஆரம்பமானபோது அதில் தீவிரமாக ஈடுபட்டுச் சிறைசென்றார். முதல்மந்திரியாய் இருந்தகாலத்திலே ஒருவர் சிறந்த தேசீயவாதியாயும், அரசியல்வாதியாயும், அவற்றுடன்பக்திவைராக்கியமுள்ளஓர் கிறீஸ்துவராயும் இருக்கமுடியுமென்பதைத் தமது சாதனைவாயிலாக இவர் அத்தாட்சிப்படுத்தியிருக்கின்றார். திருவாங்கூர்-கொச்சி இராச்சியத்திலே உணவுப்பிரச்சினை மிகவும் சிக்கலாய் இருந்தபோது இவர் அதனை வெற்றிகரமாகச் சமாளித்துப் பெரும்புகழ்பெற்றார். இந்தியாவிலுள்ள இராச்சியங்களின் 26கவர்னர்கள், முதன்மந்திரிமார்களில் இவர் ஒருவரே கிறீஸ்துவர். இதற்குமுன் காலஞ்சென்ற திரு. முக்ஹேர்ஜி என்ற கிறீஸ்துவ பிரமுகர் வங்காளக் கவர்னராய் விளங்கியிருந்தார்.

## பாப்பரசர் முதன்முறையாக

"அதிகம்நல்ல ஓர்உலகம்" என்ற இயக்கத்தின் மத்தியதானமாய்க் காஸ்தெல் காண்டல்போவுக்குச் சமீபமாக அமைக்கப்பட்டுள்ள "12-ம் பத்திநாத சர்வதேச நிலைய"த்துக்குச் சமீபத்தில் பிரத்தியேகமாக ஒருமணிநேரம் விஜயஞ்செய்தபோது, பரிசுத்த பாப்பரசர் றோமைநகர் மேற்றிராசனஎல்லையை முதன் முதலாகக் கடக்கலாயினர். 1870-ம்ஆண்டு முதல் இதுவரை எந்த ஒரு பாப்பானவருமே இந்த எல்லையைக் கடக்கவில்லை. அங்கு போய்ச் சேர்ந்ததும் "தேவனால் ஆசிக்கப்படும் அதிகம்நல்ல உலகம்" ஒன்றை ஆக்குமாறு 1952-ம் ஆண்டு மாசிமாதம் 10-ந் திகதியன்று அவர் செய்துகொண்ட வேண்டுகோளின்பேரிலே இந்தநல்லஇயக்கத்தை அடியிட்டவரான வண. றிக்கார்டோ லொம்பார்டிசுவாமிகளிடமிருந்து புதியநிலையத்தைத் திறந்து வைக்குமாறு ஓர் சிறிய வெள்ளித்திறவுகோலைப் பெற்றுக் கொண்டார். பிந்த அதன் பல்வேறு கட்டடங்களையும் அவர் பார்வையிட்டபின் அதிலேமோட்சாரோபண மாதாபேரால் அமைக்கப்பட்டுள்ள கோவிலில் நெடுநேரஞ்செபஞ்செய்தார். இந்நிலையத்திற்கெனக் கதிர்ப்பாத்திரம்ஒன்றையும்அன்பளிப்புச்செய்தார். இந்நிலையம் 250அறைகளையும், ஓர்உபந்நியாச மண்டபத்தையும் அடக்கியுள்ளது. இது மார்கழி 8-ந்திகதியாகிய தேவதாயார் மாசில்லாமல் உற்பவித்த திருநாளன்றே அதிகார பூர்வமாகத் திறந்துவைக்கப்படவிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மார்[illegible]மாதம்

**பொதுக்கருத்து:** வேதகலாபனையால் துன்புறுவோர் பொய்யும், புரட்டுமான வாக்குறுதிகளால் ஏமாந்து, தங்கள்விசுவாசத்தில் வழுவாதிருக்குமாறு வேண்டிக் கொள்வது.

**மிஷன்கருத்து:** ஆபிரிக்காவிலே கத்தோலிக்க பாடசாலைகளுக்காக மன்றுடிக்கொள்வது.

சத்தியவேத
**பாதுகாவலன்**

1956-ம் ஆண்டு
மார்கழிமாதம் 6-ந் திகதி

வண. எஸ். ஏ. ஜே. அல்போன்ஸ்
சுவாமிகளின்

## தேகவியோகம்

அர்ச். மர்த்தீனுர் குருமடத்திலே இற்றைக்கு 56 வருடங்களின் முன் 25 வயதுடைய ஓர் இளங் குருத்துவமாணவர் குருப்பட்டத்துக்கான வேதசாஸ்திரங்களைப் படித்துக் குருப்பட்டம்பெறும் நாளைப்பெரிதும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். ஏனைய தமது உடன்மாணவர்களைப்போல இவரும் மிகுந்த திறமையுடன்படித்துக் குருப்பட்டம்பெற ஆயத்தப்படும்போது, அவரது உடல்நலம் மிகமோசமாய் இருந்தமையாலே அத்திருப்பட்டம் அவருக்குக் கொடுபடுவதைக் குருமடத்து அதிகாரிகள் தடுத்து நின்றுர்கள். அதனுல், கைக்கெட்டியது கைகடந்துபோவதுபோல் குருப்பட்டம்பெற்றுத் திவ்வியபூசை நிறைவேற்றும்பாக்கியம் தமக்குக் கிட்டாமற்போகிறதேயென்று கவலையேஉருவாய், இரவுபகல் கண்ணீருங் கம்பலையுமாய், எவருமே பரிதபித்திரங்கத்தகும் காட்சியளித்துநின்றுர் அந்தஇளம் குருத்துவமாணவர். இதைஅறியவந்ததும் அப்போது யாழ்ப்பாணமேற்றிராணியாராய் விளங்கியிருந்த மகாவந். யூலன் ஆண்டவர் அவர்பட்டபெருங்கஸ்தியைக்கண்டு பெரிதும்மனமிரங்கியவராய், “ இருக்கிற நாளைக்கு இருந்து, பூசைவைக்கிற நாளைக்கு வைத்து, இறக்கிறநாளைக்கு இறக்கட்டும்” எனக் கருணையுடன் பகர்ந்து, அந்த நோயாளியான இளம்வாலிபருக்கு 1899-ம்ஆண்டு மார்கழிமாதம் 17-ந் திகதியன்று குருப்பட்டம் அருளலாயினர். இந்தக்குரவர்தான் 1873-ம் ஆண்டு மார்கழிமாதம் 3-ந்திகதி பிறந்து, இம்மேற்றிராசனத்தைச்சேர்ந்த குருப்பிரசாதிகளில் அதிககாலங்கண்டவராய் விளங்கியிருந்து, நிகழும் மார்கழிமாசம் 1-ந்திகதியன்றுசனிவாரம் தமது 83-ம் வயதிலே காலஞ்சென்ற வண. சந்தியாப்பிள்ளை அமரசிங்கம் யோசெவ் அல்போன்ஸ்சுவாமியவர்கள்.

குருத்துவாபிஷேக திருச்சடங்கு நிறைவேறும்போதே சுவாமியவர்கள் சுகத்தாழ்வுகாரணமாக எவ்வளவோ கஷ்டப்பட்டார். களைத்துச் சோர்ந்தார். குருப்பட்டம் பெற்றபின் இருவருடந்தானும் அவர் உயிர்வாழ்ந்திருப்பாரென அப்போது எவருமே காத்திருக்கவில்லை. ஆனுல், அல்லும்பகலும் கண்ணீர் பெருகத் தாம் கையெடுத்துவந்த திருஇருதயஆண்டவரின் இரக்கத்தாலே எதிர்பாராதவிதமாக அவர் குணமடைந்தார். தீர்க்காயுள்பெற்றுத் தமது குருத்துவவெள்ளியூபிலியை மாத்திரமல்ல, தம்முடைய குருத்துவ தங்கயூபிலியைத்தானும் கண்டுகளித்து, இன்னும் மூன்றுவருடகாலத்தில் தமதுகுருத்துவ வைரயூபிலியையும் காணக்கூடியவராயிருந்தார். ஆனுல், நாம் எதிர்பார்த்திருந்தவாறு இந்தப்பாக்கியம் கிட்டாமற்போய் விட்டதேயென்றுஅவரின்மரணசெய்தியை அறியவந்ததும் கவலைகொள்ளலானேம்.

சுவாமியவர்கள் எவ்வளவாக அருந்திவருந்திக் குருப்பட்டம் பெற்றுக்கொண்டாரோ அவ்வளவாக அருந்திவருந்தித் தேவதொண்டாற்றிப் பல்லாயிரக்கணக்கான ஆன்மாக்களுக்குப் பெரும்ஞானநன்மைகள் செய்திருக்கின்றுர். அவர் பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, முருங்கன், வவுனியா, யாழ்ப்பாணம், பாஷையூர், நாரந்தனை, ஊறணி, மன்னுர், முல்லைத்தீவு, அனுராதபுரம், வங்காலைஆதியாம் சுகத்துக்கேதுவும், சுகத்துக்கீனமுமான பலவிசாரணைப்பங்குகளிலும் அயராஊக்கத்துடன் அருந்தொண்டாற்றித் தமது அன்பினதும், அருஞ்சேவையினதும் ஞாபகார்த்தசின்னங்களை அங்கங்கெல்லாம் நிலைநாட்டி வைத்திருக்கின்றுர். அனுராதபுரத்திலே உதவிக்கட்டளைக்குரவராய் இருந்த காலத்திலே அங்குள்ள அர்ச். சூசையப்பர்கோவிலை இடித்துத் தரைமட்டமாக்கப்புத்தர் முனைந்து இடுதண்டமாகத் திரண்டு சென்றபோது, அவர்கள் கோவிலுள்புகுந்துதிவ்வியசற்பிரசாதத்திற்கு அநாசாரஞ்செய்து விடுவார்களோவென்று சுவாமியவர்கள்அஞ்சிப் பதைபதைத்து, நற்கருணைப்பேழையிலிருந்தசம்மனசுகளின்அப்பமுழுவதையும் பயபக்தியுடன் அருந்திவிட்டுக் காட்டுள் ஓடிச் சேமமாக மறைந்துகொண்டாரென்பதும் ஈண்டு குறிப்பிடற்பாலதாகும்.


வண. அல்போன்ஸ் சுவாமியவர்கள் இளவாலையைத் தமது ஜனனபதியாகக் கொண்டவர். அங்கு பிரஸ்தாபமாக வாழ்ந்திருந்த அமரசிங்கமுதலியாரின் மரபில் உதித்தார். யாழ்ப்பாணமேற்றிராசனத்திலே நெடுங்காலம் ஓர்நல்ல ஆத்துமகுருவாய், அரியபிரசங்கியாராய் விளங்கியிருந்து காலஞ்சென்ற வண. பி. ஏ. மரிசலின் சுவாமியவர்கள்இவரின் தாய்மாமனுவர். ஓர்குழந்தையாய் இருக்கும்போதே சுவாமியவர்களின்தாயார்இறந்துபோக, இவரின் மற்றேர் தாய்மாமனுர் இவரைஎடுத்து நல்லமாதிரியாக வளர்த்து வருங்கால், இவரது பயபக்தியான போக்கைக் கவனித்து, தேவதொண்டுக்கு இவரைக் கையளித்து, குருமடத்திற் கொண்டுவந்து சேர்த்துவிடலாயினர்.

பொதுவிலே சுவாமியவர்கள் அன்பாதரவும்,இரக்கதயாளமும் நிறைந்த ஓர் தெய்வபக்தர். அமலோற்பவ மரியநாயகி சபையின் ஓர்உத்தம சந்நியாசகுரவர். மிதித்தபுல்லும் சாகாதென்று சொல்லத்தகுந்த ஓர்சாதுவாய், எவர் மனத்தையும் நோகச்செய்யாதவர். சென்றவிடமெல்லாம் தமது ஞானமக்களின் உள்ளங்களைக் கொள்ளைகொண்டு சிறப்பெய்தியவர். எதனையும் மனப்பொறுதியுடன் அனுபவிக்கும் பெருந்தன்மைவாய்ந்த ஓர்குருமுனிவர். அப்போது தாம்குருப்பட்டம்பெறத் திருஇருதயஆண்டவர் செய்த அனுக்கிரகத்துக்காக எத்துணை நன்றியுடையவராய் இருந்தார் என்பதற்குப் பலவருடகாலம் அரிதேமுயன்று அவர்எழுதி வெளியிட்ட திருஇருதய வணக்கமாதம் எனும் அருமையான நூல் போந்த சான்றுகும்.

அமைதியான வாழ்க்கையையே தமதுஅணிகலமாகக்கொண்டு விளங்கியிருந்த சுவாமியவர்களின் அந்தியவேளையும் மிகஅமைதியானதாய்க் காட்சியளித்தமை ஆச்சரியமல்ல, மூன்றேமூன்று நாள் மரணப்படுக்கையில்விழுந்தவர் இறுதிவரை நல்லறிவுடன் இருந்து அந்தியதேவதிரவிய அனுமானங்களைப்பெற்றுச் சிறிதுவேளையால் கர்த்தரிலேஅமைதியாகக்கண்ணயர்ந்தார்.அம்மம்ம! கடைசியாக அருமைக்குரவர் அல்போன்ஸ்சுவாமியவர்களும் மரணத்திரையில் மறைந்தார்என்பதை அறியவந்ததும் உள்ளம் வருந்தினேம். கண்கலங்கிநின்றேம்.

சுவாமிகளின்புனிதஉடல் மறுநாட்காலை துக்ககோலம்காட்டிநின்ற ஆசனக்கோவிலிலே வைக்கப்பட்டு, பின்னர் அன்றுசாயந்தரம் குருமார்முப்பதின்மாரும், கன்னியாஸ்திரிமார் அறுபதின்மரும், சுற்றத்தவரும், அவர்திருத்தொண்டாற்றிய விசாரணைப்பங்குகளிலிருந்து வந்திருந்தவர்கள் பலரும், பாடசாலைப்பிள்ளைகளும், ஏனையோருமாகப் பெருந்திரளானமக்கள் குழுமியிருந்த சமுகத்திலே நம்மேற்றிராணியாண்டவரவர்கள்கடைசிச்செபங்கள்சொல்லி அந்தியதிருச்சடங்குகளை நிறைவேற்றியதும், பெரிய ஊர்வலமாகச்சேமக்காலைகொண்டுசென்று, இலங்கையிலுள்ள அமலோற்பவிசபைக் குருமாரின் அதிசிரேஷ்டரான மகா வண. ஜி. பெல்ரின்சுவாமியவர்கள் கடைசிஆசீர்வாதம்கூறிநிற்க பிரலாபமத்தியிலே பூமிதானஞ் செய்யப்படலாயிற்று.

**R. I. P.**




## கோவையில்
## அர்ச். சவேரியார்

ஆத்தும வாஞ்சையால் தூண்டப்பட்டுக் கீழைத்தேயங்களைநாடிப் பிரயாணம்செய்த பிரான்சீஸ் சவேரியார் 13 மாதங்களின்பின் கோவைப்பட்டணத்தை அடைந்தார். கோவைநகரிலே அந்நாளில் வதிந்த போர்த்துக்கேயர் வாணிபத்தை வளப்படுத்துவதில் அதிகசிரமம் எடுத்தபடியால் பெருந்தொகையான செல்வத்தைச் சேகரித்துக்கொண்டனர். நாளடைவிலே செல்வச்செருக்கால் செந்நெறியிழந்தனர். மக்களிடையே நிலவிய பொறுமை, பணஆசை முதலிய தீயபழக்கவழக்கங்களை ஒழித்து அவர்களது வாழ்க்கையில் ஓர் மறுமலாச்சியை உண்டுபண்ணச் சவேரியார் அரும்பிரயாசப்பட்டார். கோவை நகரிலே மங்கி மாசுபடிந்திருந்த வேதவிசுவாசத்திற்கு ஓர்புத்துயிர்அளிக்க இடையறுமலே முயற்சித்துவந்தார். நகரின் வீதிகள்தோறும் கைமணியுடன்சென்று சிறுவர்களை ஒன்றுசேர்த்து வேதவிசுவாசசத்தியங்களை அவர்களுக்குக் கற்பித்தார். பாலர்களின் உள்ளங்களைக் கொள்ளைகொள்ளும் இனியகீதங்களைக் கற்பித்தார். தூயஇருதயமுடைய சிறுவர்கள் தங்கள்நாட்டில் வேதவிசுவாசம்தழைக்க அருள்செய்யவேண்டுமென்று பாவாலும், நாவாலும் பரனை இரந்துநின்றனர். பள்ளிப்பாலர்களின் பரவசமிக்க பாடல்களும், வேண்டுதல்களும் பரனின் அருளை அந்நகரின்பால் சொரியச்செய்தது. நகரவாசிகள் தங்கள் தப்பிதமான கொள்கைகளை உணரத் தலைப்பட்டனர். நாளடைவில் கோவைமக்கள் ஏவாமக்களாய்க் கிறீஸ்துவசீவியக் கடமைகளை இயல்பாக அனுசரிக்கத் தலைப்பட்டனர்.

பிறர்சிநேகவாஞ்சையால் தூண்டப்பட்ட சவேரியார் பிணியாளரின் இல்லங்களைத் தரிசித்து அவர்களைப் பராமரிக்கும் பணியிலீடுபட்டார். பிணியாளர் கிறீஸ்துநாதரின் பிரதிபிம்பங்கள்என்பதை உணர்ந்து தமதுஅன்புகனிந்த மொழிகளாலும், தற்பரித்தியாகக் கிரிகைகளாலும் அவர்களின் துன்பதுயரங்களில் ஆறுதலளிக்க முனைந்தார். இவரின் தியாகசேவை கல்நெஞ்சுபடைத்த அநேகபாவிகளின் இருதயங்களைக் கரைத்துருக்கியது குஷ்டரோகிகளின் உடல்வியாதியைப் பரிகரித்த சவேரியார் அவர்களின்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ருஷியா மனந்திரும்புமா ?
### ஆம் என்கிருர் ஆண்டகைஷீன்

ருஷியாமனந்திரும்பி, உலகம்அனைத்திலும் அப்போஸ்தலசேவை புரியும் நாள் வந்தேதீரும்என்கிருர் ஐக்கிய அமெரிக்கதேச விசுவாசப்பரப்புதல் சபையின் தேசீய தலைவரான மகாவந். புல்ரன் ஷீன்ஆண்டகை அவர்கள். "அமெரிக்கன் வீக்லி" என்னும் பத்திரிகையிலே கம்யூனிஸத்தின் வருங்காலத்தைப்பற்றியும், கம்யூனிஸ்தர்களை மனந்திருப்பஆசிப்போர் கையாளவேண்டிய முறைகளைப்பற்றியும் அரிய கருத்துக்கள்அமைந்த கட்டுரைஒன்றை அவர் வரைந்திருக்கிறார்.

"கிறீஸ்துநாதரையும், அர்ச். இராயப்பரையும் ருஷியாஏற்றுக்கொண்டு விசுவாசப்பரப்புதல்வேலையில் பிறநாடுகளுக்கு வழிகாட்டும்நாள் நெருங்கிவிட்டதெனக் கருதுகிறார் ஆண்டகை அவர்கள். "ஐரோப்பிய நாடுகளிலே இல்லாத ஓர்நெருப்பு ருஷியாவில் இன்று எரிகிறது. நம்மிடம் உண்மையிருக்கிறது. ஆனல், உணர்ச்சிஆர்வம் இல்லை. கம்யூனிஸ்தரிடம் உணர்ச்சி ஆர்வம் இருக்கிறது. ஆனல், உண்மை இல்லை.

"உலகமுழுவதும் பரவியிருக்கும் நெருப்பாகவே கம்யூனிஸம் இன்று காட்சியளிக்கிறது அந்த அனற்பிழம்பில் கம்யூனிஸ்தரின்உள்ளங்கள் பற்றி எரிகின்றன. இன்று கீழ்நோக்கிஎரியும் அந்தஅக்கினி ஒருநாள் பெந்தக்கோஸ்து நாளில் நிகழ்ந்ததுபோல், மேல்நோக்கித் தாவிஎரியும்.

"ஓர் பொதுவுடைமைவாதியைமனந்திருப்ப விரும்புபவர் மூன்றுவிதிகளை மனதில்கொள்ளவேண்டும்.

1. கம்யூனிஸத்தைப்பற்றி அவனுடன் தர்க்கம்செய்யப்படாது. கம்யூனிஸ்தர் தர்க்கமுறைகளை ஏற்றுக்கொள்வதில்லை. ஆதலால், அவர்களுடன் வாதுசெய்து பயனில்லை.

2. ருஷியாவின்நிலைமையை அவனுக்கு விளக்கிக்காட்டப்படாது. நரகத்திலிருந்து வெளிவரும் சாத்தான் கூட நரகநெருப்புக்கு வெப்பம்மிகுதியென்று ஒப்புக்கொள்ள மாட்டான்.

3. பொதுவுடைமை வாதியின் பேரில் வெறுப்புக்கொள்ளலாகாது. பொதுவுடைமையை வெறுக்கலாம். ஆனல், அந்தக்கொள்கையைப் போதிக்கும்மனிதனை வெறுக்கலாகாது. பொதுவுடைமைவாதியும் ஒருமனிதன்என்பதை நாம்மறக்கக்கூடாது. காயம்பட்டஉள்ளத்தைத் தேற்றிமென்மை செய். உள்ளத்தில்நடக்கும் போராட்டத்தில் அவனுக்குச் சமாதானத்தின் தூதுவனாய் இரு. கடவுளை அவனுக்குக் கொடு. கார்ள்மார்க்ஸைப்பற்றியும், லெனினைப்பற்றியும் போதித்து நான் எந்தப் பொதுவுடைமைவாதியையும் மனந்திருப்பியதில்லை. கிறீஸ்துநாதரையும், இராயப்பரையும் போதித்து மனந்திருப்பியிருக்கிறேன்."

---

ஆன்மசுத்திக்காகவும் அயாராதுழைத்தார். கடினவியாதியுடையோரின் கட்டிலண்டை கண்ணயராது விழித்திருந்து அலகையின் சதிவலைகளிலிருந்து அவர்களை விடுவித்து அவர்களின் ஆன்மஇரட்சணியத்தை நிச்சயப்படுத்துவார். இவ்வண்ணம் தமது சலியா உழைப்பால் கோவைநகரில் ஓர்மறுமலர்ச்சியை உருவாக்கினர்.

— நல்லூர்

## யாழ்ப்பாணத்தில்
## பெருங் கண்டனக் கூட்டம்

1956-ம்ஆண்டு மார்கழிமாதம் 9-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5மணிக்கு ஆசனக்கோவில் மைதானத்திலே, யாழ்ப்பாண மேற்றிராசன ஐக்கியசங்கத்தின் ஆதரவில் யாழ்ப்பாணக் கத்தோலிக்கமக்களின் மாபெருங் கூட்டம் ஒன்றுநடைபெறும். அதன்நிகழ்ச்சிகள் வருமாறு:

(1) பரிசுத்த கன்னிமரியம்மாளைப்பற்றி மிரிசா பண்டித கண்டஜோதி தேரோஎன்ற புத்தகுருவால் எழுதப்பட்ட "கன்னி மரியாகே ஹற்றி" என்ற துண்டுப் புத்தகத்தைப் பிரசுரித்ததையும், விநியோகித்ததையும் கண்டித்து எதிர்பேசுவது.

(2) இந்தத் துண்டுப்புத்தகமும், இதுபோன்ற பிரசுரங்களும் கத்தோலிக்கமக்களின் சமய உணர்ச்சிகளுக்குப் பங்கம்விளைத்து, ஸ்ரீ லங்காவில் வதிகின்ற உணர்ச்சியும், உசித சிந்தனையுமுள்ள பிரசைகளின் நற்பெயரைக் கெடுக்கின்றன. அதனல் இத்துண்டுப் புத்தகத்தை விநியோகியாது தருவித்துக்கொள்வதற்கும், அதுபோன்ற பிரசுரங்களைத் தடைசெய்வதற்குமான ஆவசியக தீவிரநடவடிக்கைகளை எடுக்குமாறு அதிகாரிகளைக் கேட்டுக்கொள்வது.

பரிமேலர் எஸ். அருளானந்தம், கே. எஸ். ஜி. அவர்கள் தலைமை வகிப்பார். எல்லோரும் பரிவாக அழைக்கப்படுகின்றார்கள்.

**ஏ. லாசறஸ் (தம்பு)**
கௌரவகாரியதரிசி, யா. மே. ஐ. சங்கம்.

* * *

## Protest Meeting at Jaffna.

A meeting of the Catholics of Jaffna will be held under the auspices of the Jaffna Diocesan Union at the Cathedral grounds at 5 p.m. on Sunday, 9th Dec. 1956.

(a) To protest against the publication and distribution of the pamphlet entitled "Kanni Mariyage Hati" by Mirissa Panditha Chandajothi Thero regarding The Blessed Virgin Mary.

(b) To request the Authorities to take necessary and speedy steps to withdraw this pamphlet and ban similar publications as this hurts the religious susceptibilities of the Catholics and mars the fair name of the many decent thinking Citizens of Sri Lanka.

Chevalier S. Arulanantham, K.S.G. will preside.

All in sympathy with the above are cordially welcome.

**A. Lazarus (Thampoe)**
Hon. Secretary
Jaffna Diocesan Union.

FOR SALE

**DESK CALENDAR 1957**

PRICE: 10 CTS.

Postage 4 cts.

St. Joseph's Catholic Press,
JAFFNA.

### தலைமையாசிரியர்களுக்கு அறிவித்தல்

நவமணிவாசகங்கள் யாழ்ப்பாண மேற்றிராசனத்திலுள்ள சகல கத்தோலிக்க பாடசாலைகளிலும் பாவிக்கப்பட வேண்டுமென்று இத்தால் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

PHILIP PONNIAH,
Gen. Manager, R. C. Schools
Jaffna, 6-12-56.

---

**தினம் 5000** **வருடம் 15 லட்சம்**

திருப் பூசைப் பலிகளின் பலன்கட்குப் பங்காளராக விரும்புகிறீர்களா?

உங்கள் கருத்துகட்காகப் பூசகர் தினம் பூசைப்பலி ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று ஆசிக்கிறீர்களா?

**அமலோற்பவ மரியநாயகி பத்திச்சபை அங்கத்தினராகுங்கள்!**

விபரம் பெற்றுக்கொள்ளும் இடம்:

**காரியதரிசி,
அமலோற்பவ மரியநாயகி பத்திச்சபை,
48, தட்டாதெரு, கொழும்பு.**

---

வஸ்தியாம்பிள்ளை சந்தியாப்பிள்ளை
அவர்களின்

முதலாம் வருட
**மரண ஞாபகம்**

| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 25-7-1880 | 10-12-1955 |

**"என்னுடைய சீவியமும் மின்னலைப் போல் தோன்றி மறைந்தது!"**

**"என்னைச் சீவியத்தில்நேசித்தவர்களே! என்னைமரணத்திலும் மறக்காதீர்கள்!"**

எங்கள் குடும்பத்தின் செயசோதியாகப் பிரகாசித்து, எல்லோரையும் அன்புடன் நேசித்துவந்த எங்கள் அருமைத்தந்தை எங்களைப் பரதவிக்கவிட்டு, பரமனின்பாதம்போய்ச்சேர்ந்த முதலாம்வருடம் 10-12-56 திங்கட்கிழமை பூர்த்தியாகின்றது. இதை வாசிக்கும் சகோதர, சகோதரிகளே இவ் ஆத்துமத்தை நினைவுகூர்ந்து வேண்டிக்கொள்ளத் தடவாய்வேண்டுகிறோம்.

நேசபிதாவை இழந்தமக்கள்

**கத்தரீன்-பிரான்சீஸ்
மேரிமாகிறேற்-சந்தியாப்பிள்ளை
ரேசம்மா-அந்தோனிப்பிள்ளை**

---

● கடந்த மூன்று மாதங்களிலும் ஷாங்காய்நகரிலுள்ள கம்யூனிஸ்த சிறைச்சாலைகளிலிருந்து ஒன்பதுசீனக் குருமார் விடுதலைசெய்யப் பெற்றிருக்கிறார்களென ஹொங்கோங்கிலே செய்தி கிடைத்திருக்கிறது இவர்களில் யேசுசபைக்குருமார் நால்வரும், மேற்றிராசனகுருமார் இருவரும், பிரான்சீஸ்கன் சபைக் குருவானவர்ஒருவரும் அடங்குவார்கள். திருச்சபைக் கருமங்களிலே அரசாங்கம் தலையிடுவதை அங்கீகரிக்க மறுத்ததற்காக இவர்கள் மூன்றுவருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தார்கள்.

## ஓர் எச்சரிக்கை

பாலைதீவு, அர்ச். அந்தோனியாரின் திருநாமத்தைச்சொல்லி, அப்பதியிலே ஓர்பாலங்கட்டுவதற்கென்றும், பிறபணிகளுக்கென்றும் கட்டளைச்சுவாமியாரிடமிருந்து அதிகாரம்பெறாத ஒருவர் ஊரூராகச்சென்று, ஊருக்குஊர் ஒவ்வோர்பெயரும், விலாசமுங்கொடுத்துப் பணந்தண்டிவருகிறாரென அறிகின்றோம். அதனல் இவர்மட்டிலே எச்சரிக்கையாய் இருக்குமாறு எல்லோரையும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

**H. மொறே,** O. M. I.,
கட்டளைக்குரவர்.

### குருத்துவ வெள்ளியூபிலி விழா

சம்பத்திரிசியார் கல்லூரிப் போராசிரியர்களில் ஒருவரான வண. எஸ். டேவிட் சுவாமியவர்களும், வவுனியாக் கட்டளைக் குரவராய் இருந்துவருகின்ற வண. எஸ். வேந்தர்கோன் சுவாமியவர்களும் நிகழும் மார்கழிமாதம் 19-ந் திகதி புதன்கிழமையும்,

இளவாலை, சென்என்றீஸ் கல்லூரியின் அதிபரான வண. எல். ஏ. சிங்கராயர் சுவாமியவர்கள் நிகழும் மார்கழிமாதம் 21-ந் திகதி வெள்ளிக்கிழமையும் தங்கள் குருத்துவ 25 வருடநிறைவு வெள்ளியூபிலி விழாவைக் கண்டுகளிக்க விருக்கிறார்கள் என்னும் சுபசெய்தியை அவர்களின் ஞானமக்களும், பழையமாணவர்களும், அன்பர்களுமான அனைவர்கட்கும் மகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானும் ஒரு குருவாகலாமா?

## குருத்துவ அழைத்தல்

நானும் ஒரு [illegible]கலாமா? இவ்வெண்ணம் பல [illegible]ரின் உள்ளத்தில் சில சந்தர்ப்பங்களில் உதிப்பது ஆச்சரியமான காரியமல்ல. ஓர் குருத்துவ அபிஷேக திருச்சடங்கு நடைபெறும் பொழுது, குருத்துவத்தின் மகிமையைப்பற்றி வாசிக்கும்பொழுது, அதைப்பற்றிப் பிரசங்கத்தில் கேட்கும் பொழுது, அல்லது குருவானவரின் தொண்டுகள், கைங்கரியங்கள் முதலியவற்றைக் காணுகையில், ஒருவர் குருமடத்தில்சேர இருக்கும் சந்தர்ப்பத்தில் இன்னும்இவைபோன்ற தருணங்களில் ஒருவர் குருத்துவத்தைப்பற்றிச் சிந்திக்கக்கூடும். தம் எதிர்கால வாழ்வைப்பற்றி ஒன்றன்பின் ஒன்றாய்ப் பல மனக்கோட்டைகள் கட்டுவதில் வாழ் நாளைக்கழிப்பதே வாலிபரின்வழக்கம். இம்மனக்கோட்டைகளில் குருத்துவமும் ஒன்றாகஇருக்கலாம். ஆனால், ஒரு வாலிபன் முதியோருடைய ஆலோசனையுடன் தன்வாழ்வின் இலட்சியத்தைத் தீர்க்கமாய்த் தீர்மானித்து அதைக் கடைப்பிடித் தொழுகல் வேண்டும். அல்லாவிடின் ஒரேமுறையில் பலதுறைகளை நோக்கிச்செல்லும் மாலுமி ஒரு துறையையும் அடையாததுபோல், அல்லது இரண்டுதோணியில் கால் மிதித்தவன்போல் தன்வாழ்வைப் பாழாக்குகிறான். தன்வாழ்வின் இலட்சியத்தை ஏற்கனவே தீர்மானித்துத் தன்தைரியமெல்லாம்கொண்டு அதை அடைய முயற்சிப்பது உசிதமானதே. குருவாய்வர விரும்புபவர்களுக்குச் சில யோசனைகள் கீழேகுறிப்பிடப்படுகின்றன.

### கடவுளின் அழைப்பு என்ன?

"மகனே! நீஉன்இருதயத்தை எனக்குக்கொடு." இது யேசுநாதர் எம்எல்லோரிடமும் கேட்கும்விண்ணப்பம். தம்முயிரை எமக்காகத் தியாகம் செய்த திவ்வியயேசு என்அன்பைக் கேட்கிறார். மன்னுயிரைத் தன்னுயிராய்நேசித்த எம்பெருமானுக்கு என் அன்பைத் தியாகஞ்செய்ய வேண்டும். என்முழுஇருதய அன்பைக்கேட்கிறார். அவருடன் நித்தியஅன்பால் ஐக்கியப் படுவதே என்கடைசிக் கதியென்றால், இவ்வுலகிலும் என்முழுஅன்பை அவருக்கே அர்ப்பணம்செய்யவேண்டும். இந்தஅன்புக்குமாறான பற்றுதல்களை மாத்திரமல்ல, நீதியாய் அனுபவிக்கக் கூடிய இன்பங்களையும்அர்ப்பணம்செய்யக் கூடுமாகிலல்லோ தாவிளை.

கழுமரத்தில்தொங்கும் கருணைநிறை கடவுளின் அழைப்பு என்ன? மகனே! என்னால்மீட்கப்பட்ட ஆத்துமங்களை, கர்ச்சிக்கிற சிங்கம்போல்திரியும் பசாசின் வாயிலிருந்து விடுதலையாக்க எனக்கு உதவிசெய்யமாட்டாயோ? உலகமாயைஎன்னும் கொடியவலையில் சிக்குண்டிருக்கும் எனதுமக்களை மீட்க மாட்டாயோ? இருகண்ணும்கெட்ட குருடர்போல நரக பாண்கிணற்றை நாடும் நன்றிகெட்டமக்களை நல்வழியில் நடத்தமாட்டாயோ? மகனே! என் வேலையை — மனிதனை ஈடேற்றும் வேலையை நீசெய்ய முன்வாராயோ? உன் அன்பையும், முழுச்சீவியத்தையும் எனக்கு வழங்கமுடியாதா? என் அன்பிற்காக இல்வாழ்வை வெறுக்கக்கூடாதா? பொருள்பண்டங்களை வெறுக்க ஆயத்தமா? உனது பழுதாய்ப்போன சுபாவத் துர்நாட்டங்களை அடக்கி, எனதுசித்தத்தை, எனதுபிரதிநிதியாகிய மேற்றிராணியாருடைய விருப்பத்தை நிறைவேற்ற ஆயத்தமாய்இருக்கிறாயா? நீ ஆயிரமாயிரம்மக்களுக்கு உன்வாழ்வைப் பிரயோசனப் படுத்தலாமே! எவ்விதம்? ஒருகுடும்பத்தையல்ல, பலகுடும்பங்களைப் பாதுகாக்கலாம். பாவிகளை மனந்திருப்பலாம். நல்லவர்களை இன்னும் பரிசுத்தப்படுத்தலாம். அறியாமையை அகற்றலாம். மெய்ஞ்ஞானத்தைப் பரப்பலாம். உன் ஊழியம் பலஆத்துமங்களின் மீட்பிற்கு அடிகோலும்.

### எல்லாவற்றிலும் சிறந்தஞானம்

என்னசொல்லுகிறாய் மகனே? உன்னைப்பூரணமாய் எனக்கு அர்ப்பணம் செய்கிறாயா? நீ இவ்வுலகில் பெரியவனாய்க் கீர்த்தியுடன் விளங்க விரும்புவாய்போலும். ஒருவேளை ஒரு [illegible]நாட்டு வைத்தியனாய் வரவிரும்புவாய். வைத்தியத்தொழிலில்துன்பப்படுவோருக்கு ஆறுதல்அளித்துப் பெருந் தருமம்புரியலாம். ஆனால், அழியாத நித்தியசுகத்தையும், மகிழ்ச்சியையும் கொடுக்கக்கூடியவர் ஆத்துமவைத்தியரே என்றுஉணர். நீ ஒருநீதிசாஸ்திரியாய் வரவிரும்பலாம். இதில் நீ அநீதியைஅழித்து, நீதியைநிலைநாட்ட விரும்புகிறாய். ஆனால், நீதியைமாத்திரமல்ல, இரக்கத்தையும் அளிக்கும் சாஸ்திரி குருவே. நீ பெருங் கட்டட நிபுணராய் வர ஆசிக்கலாம். ஆனால், மக்கள்வாழ்வைச் சீர்ப்படுத்தி, நற்பழக்கங்களை வளர்த்து, வருங்காலவாழ்வை வளப்பாக்கும் வன்மைவாய்ந்தவர் குருவேயாகும். நீ ஒருவிஞ்ஞானியாகவர விரும்புகிறாய்போலும். நவீன உண்மைகளைக் கண்டுபிடிக்க விரும்புகிறாயாக்கும். ஆனால், மனிதரைப் பரிசுத்தராக்கும்முறையே எல்லாவற்றிலும் சிறந்தஞானம்—அது தேவனுடைய ஞானம். இப்படிச் சகலஊழியங்களினதும் மகிமையைக்கொண்டதும், எல்லாவற்றிலும் மேலானதுமே குருத்துவ வாழ்க்கை. குரு யேசுவுடையபோர் வீரன். முன்னணியில்நின்று வேதசத்துராதிகளை எதிர்த்துப்போராடும் தளகர்த்தன். புதுஇடங்களைக் கிறீஸ்துநாதாது அன்பின்ஆட்சிக்கு உட்படுத்தும் படைத்தலைவன் அவரே. மனிதருடைய ஆத்மீகவழிகாட்டி அவரே.



இவ்வளவு மகிமைமாத்திரமல்ல, குருத்துவத்திற்கு இயல்பாகியமகிமையும் உண்டு. வேறெவர்க்கும்—வானதூதர்களுக்குத்தானும் கிடைக்காதமகிமை, தேவனைப் பலியாக்குகிறமகிமை, பாவத்தைப் பொறுக்கும்மகிமை அவருக்கு உண்டு. பரலோகவாசலில் நின்று— வேறோர் கிறீஸ்துவாகநின்று பரலோகத்தை எமக்குஉரிமையாக்குவது அவரின்ஊழியமே.

இப்படிப்பட்ட பிறர்சிநேகக்கிரிகைகளால் ஏற்படும்மகிமையுடன் இக்கிரிகைகளைச்செய்யத் தகுதி உள்ளவராய்த் தெரியப்படும் பாக்கியமும் இருக்கிறது. யேசுவுக்காக எல்லாவற்றையும்வெறுத்து வந்தவர்களுக்கு நூறுமடங்கு பாக்கியம்கிடைக்கும். "என் நாமத்தைப்பற்றி வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தந்தையையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டுவிட்ட எவனும் நூறுமடங்குபெறுவான். நித்தியசீவியத்தையும் சுதந்தரித்துக் கொள்ளுவான். (மத். அதி. 19. வச. 29).

### குருமாரின் பாக்கியம்

ஆனால், குருத்துவத்தின்மகிமையும், அதன் வெகுமதியும் மாத்திரமல்ல, கிறீஸ்துநாதர் தற்கால உலகிற்குத் தேவையெனத் தோற்றும்பொழுது அவருக்குப்பதிலாய், அவரின் வேலையைக் குருவே செய்யவேண்டும்என்று அறியும்போது ஒரு குருவுக்கு அது ஆனந்தத்தை உண்டாக்கும். ஏனெனில், கிறீஸ்துநாதரின் போதனை — தேவனின்போதனை எக்காலத்திற்கும் ஏற்றது. இக்காலத்திலும் மனிதருக்கு மீட்சியைக் கொடுக்கக்கூடியது. யேசுநாதர் இக்காலத்தில் இருந்தாலல்லோஎனப் பலர்ஆசிக்கலாம். ஆனால், அவர் ஒவ்வோர்குருவிலும் இருக்கிறார். கிறீஸ்துவாய்இருக்கும் பாக்கியமே குருமாரின்பாக்கியம். குருவைக்காணும்பொழுது கிறீஸ்துநாதரையே காண்கிறோம்.

இவ்வித உந்நத மகிமைக்குத்தானும் தகுதிஉள்ளவனோ என்பதுதான் வாலிபனின்கேள்வி. பூரணகற்பைஅனுசரிக்கமுடியுமா? எத்தனை பாவச்சோதனைகளை மேற்கொள்ள இயலும்? கடும்விடாமுயற்சியும், தற்பரித்தியாகமும்இல்லாமல் எப்படிக் குருவாகமுடியும்! "பாடின்றிப் பட்டமில்லை" என்றால், பெரும்பாடின்றிப் பெரும்பட்டமில்லை. படிப்பும் கடினமானதல்லவா? லத்தீனும் படிக்கவேண்டுமேஎன்று வாலிபன்எண்ணுவான்.

வாலிபனே! கடினமில்லாத சீவியமல்ல, கடும்பிரயாசையான சீவியமே நற்குருவின்சீவியம். ஆனால், இவ்வுந்நதநிலைக்குத் தேவன் உன்னை அழைத்தால் அந்நிலைக்கேற்ற வரங்களையும உனக்குக்கொடுப்பார். தாங்கமுடியாத அளவு உன்னைச் சோதிக்கமாட்டார். "சர்வேசுரன் பிரமாணிக்கம்உள்ளவர். உங்கள்திராணிக்குமேலாக நீங்கள் சோதிக்கப்படுவதற்கு அவர் இடங்கொடார். ஆனால், நீங்கள் சோதனையைத்தாங்கும்படி சோதனையோடு வழிபண்ணுவார். (1 கொரி. 10-ம் அதி. 13-ம்வசனம்)

### அழைத்தலுக்குரிய அறிகுறிகள்

தேவன் என்னை அழைக்கிறாரா? இதை எப்படிஅறியமுடியும்? இது வாலிபனின் கேள்வி. குருத்துவ அழைத்தலுக்குரிய அடையாளங்களைக்கொண்டு இதை அறியலாம். அவைகள்:

(1) நற்கருத்துடன் குருவாய்வர விருமபுவது.

(2) நல்லொழுக்கமான சீவியம்.

(3) சாதாரணமாணவனிலும் கூடிய புத்திக்கூர்மை.

(4) தேகசௌக்கியம்.

(5) நல்லொழுக்கமும், தேவபயமும் உள்ள குடும்பததில் உதித்திருக்க வேண்டும்.

இவைகளைப்பற்றி உனது ஆத்தும குரு அல்லது பங்குக்குருவின் ஆலோசனையைக்கேட்டுக் குருவாய்வரத் தீர்க்கமான தீர்மானம்எடுப்பதே சாதாரண முறை

மேற்கூறிய அறிகுறிகள்யாவும் அவசியம். ஆனால், எல்லாவற்றிலும் முக்கியமானது, முதல்அறிகுறியாகிய நற்கருத்துடன் குருவாய்வர விரும்புதல் என்பதே. ஒருவனுடைய தணியாத ஆசையே அவன் ஆசிக்கிறதை அடையப்பண்ணும் முதற்கருவி. தணியாத இந்தஆசை பலஇடையூறுகளை எதிர்த்து வெற்றிகாணும். குருவாக வரவிருக்கும் அடங்காத ஆசையைக் கொண்டு குருவாகவருகிறதற்குஉனக்கு உள்ள பலவிக்கினங்களை மேற்கொள்ளலாம்என்பது அறியத்தக்கது.

இப்படியே குருவாகவர விரும்புகிறவன் தன்னிலுள்ள துர்க்குணங்களை எதிர்த்துப்போராடி அவைகளுக்கெதிரான புண்ணியங்களை அனுசரிக்க முயற்சிப்பான். கோபத்தைச் சாந்தத்தாலும், சோம்பலைச் சுறுசுறுப்பாலும், பொறாமையைப் பிறர்சிநேகத்தாலும், உலோபத்தைத் தருமசிந்தையாலும மேற்கொள்வான். இன்னோர்கிறீஸ்துவாகவரவிரும்புகிறவன் எவ்விதத்திலும் கிறீஸ்துநாதரின் அரியபுண்ணியங்களை அனுசரிக்கப் பிரயாசப்படுவான்.

இல்வாழ்வையும், உலகஇன்பத்தையும்வெறுத்துப் பூரணகற்பு அனுசரிக்கிறது ஒருவருக்குக் கடினமாய்த் தோன்றும். மனிதபலத்தால்மாத்திரம் இதைக்கடைப்பிடிப்பது கடினம். ஆனால், தேவனின்உதவியால் இதை அனுசரிக்கமுடியும். சாதாரணசுகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோடு இருக்கிறவனும், நீடிய துர்ப் பழக்க வழக்கங்களைப் பழகாதவனும், பாவச்சமயங்களைப்பற்றிச் சாக்கிரதையாய் இருக்கிறவனும், தேவஉதவியைத் தாழ்மையுடன் தேடுகிறவனும் பூரண கற்பை அனுசரிக்கக்கூடுமென உறுதி மொழிகூறலாம். கன்னியரைக் கிறீஸ்துநாதர் விரும்புகிறார். ஆனால், கன்னி சுத்தத்தைச் சிந்தனை, வாக்கு, கிரிகையால் இழந்திருந்தாலும் அது பழக்கத்தில் உறுதிப்பட்டிராவிட்டால், ஒருவர் பூரணகற்பை அனுசரிக்கமுடியுமென்று சொல்லலாம். துர்ப்பழக்கத்தில் அதிகம் வேரூன்றியவர் குருவாகவர முடியாது. குருத்துவவாழ்வை அப்பேர்ப்பட்டவர் தேடக்கூடாது. குருத்துவ வாழ்வை அவர்தேடுவது அவருடைய அழியாத ஆத்துமத்திற்குக் கேடாயும் முடியலாம்.

புத்திக்கூர்மை ஓர்அளவிலென்றாலும் இருக்கவேண்டியதே. ஏனெனில், சாதாரணஉலககல்வியிலே லத்தீன், ஆங்கிலம்முதலிய மொழிகளுடன் சிரேஷ்டபாடசாலைத் தாரதரப்பத்திரப்பரீட்சையில் சித்தியடைந்தபின் தத்துவஞானத்தை மூன்றுஆண்டுகளும், வேதசாஸ்திரங்களை நாலுவருடங்களும் படிக்கவேண்டும். குருத்துவ அறிவைக் குறைவில்லாமல் அடைவதற்கு மேல்வகுப்புப் பரீட்சைகளில் சித்தியடைந்திருத்தல் அவசியமென்பது சொல்லாமலேவிளங்கும். பொதுவிலே தனதுகடமைகளைச் செய்வதில் மனத்தைரியத்துடன் அயராமுயற்சி எடுக்கிறவன் நல்ல குருத்துவமாணவனுவான். தேகசௌக்கியத்தைப்பற்றி அதிகம்சொல்லவேண்டிய அவசியம் இல்லை. சாதாரணதேகசௌக்கியம் இல்லாவிடின் பிறர்சேவியத்தில் பிற்காலம் தன்னைச்செலவழிப்பது எப்படி? குருத்துவமேற்படிப்புப் படிப்பதற்குத் தகுந்ததேகசௌக்கியம் இல்லாவிட்டால் எப்படிக் குருவாய்வரமுடியும்?

## நற்கனியைத் தேவனுக்குக் கொடுங்கள்

குருவாய்வருபவருடைய பெற்றோர், சகோதரர், உறவின்முறையார் கெட்டவர்களென்றால் அது குருவாய்வரப் போகிறவருக்கு அவமானமாயிருக்கும். "நல்லமரந்தான் நல்லகனிகளைக் கொடுக்கும்." நல்லகுடும்பத்துப்பிள்ளைதான் மேலான அந்தஸ்தாகிய குருத்துவத்தை நாடி அடையலாம்.

சிலசந்தர்ப்பங்களில் குருத்துவ அழைத்தலைப் பெற்றோர் தடைபண்ணுகிறார்களென்று வாலிபர்சொல்லுவார்கள். ஒருவாலிபன் தனது குடும்பத்தைத்தாபரிக்க அவசியமான உதவியாயிருந்தால் பெற்றோர் அவனைத் தடைபண்ணலாம். இன்னும் தங்கள் வாலிபன் சாவதானமற்ற தீர்மானத்துடன் குருவாகவர விரும்பினால், அவனுக்கு உடனேசம்மதம்கொடாமல் அவனைச்சொற்பகாலம் சோதித்துப் பார்க்கலாம். அப்படியில்லாமல் வன்மையான தேவஅழைத்தலின் அறிகுறிகளை அவ்வாலிபன் காட்டும்பொழுது எதிர்த்துநிற்பது மூடத்தனமாகும். தேவன் தந்ததைத் தேவனுக்குஅளிக்கப் பின்வாங்குவது பேதமையாகும். பொருளாசையாற்தூண்டப்பட்டு மகனுடையஉழைப்பை விரும்புவதும், மகன் குருத்துவஅழைத்தலைப் பின்பற்றாமல்விடப் பண்ணுவதும் விசுவாசக் குறைவின் அடையாளமே. "இவர்தான் என்பிள்ளைகளில் ஆகஅருமையானவர், இவரில்லாமல் நான் எப்படிச் சீவிக்கலாம். இன்னொருபிள்ளை விரும்பினால் குருவாகவரட்டும்" என்று சொல்வது, திறமானகனியைத் தேவனுக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுக்காத காயீனுடைய செய்கைக்கு ஒப்பாயிருக்கிறது. தேவன் தந்ததைத் தேவன் வலோற்காரமாய் எடுக்கவுங்கூடும். வேதவிசுவாசமுள்ள பெற்றோருக்கு மகன் குருவாகவருவதைப் போன்ற வேறுபாக்கியமுண்டா? தன் பிள்ளை தன்னை ஆசீர்வதிக்கும்போதும், தன்கர்த்தரைத் தனதுபிள்ளையின்கரத்தால் பெறும்போதும் ஒருதாய் ஆனந்தக்கண்ணீர் சிந்துவாள் அல்லவா? இம்மையிலும், மறுமையிலும் பெற்றோரை நினைவுகூர்ந்து அநுதினமும் அவர்களுக்காகத் தேவனுடைய இரக்கத்தை வேண்டிநிற்பவர் சத்தியவேத குரு அல்லவா? பெற்றோரே! ஒரு குருவை உங்கள்குடும்பத்தில் காணும் பாக்கியம் உங்களுக்குக்கிடைக்கவேண்டுமென்று அநுதினமும் தேவனைப் பிரார்த்தித்து வாருங்கள். உங்கள் பரித்தியாகக்கிரிகைகளை இதற்காக ஒப்புக்கொடுங்கள்.

வாலிபர்களே! மேற்கூறிய அறிகுறிகளைக்கொண்டுதான் நீங்கள் குருவாய் வரலாமோவென்று தீர்மானம் எடுக்கவேண்டியது. இதில் உங்கள் பெற்றோரும், குருமாரும் உதவிசெய்வார்கள். கடைசியாகத் தீர்மானம்செய்வது மகாவந். மேற்றிராணியாண்டவரின் உரிமையும், கடமையுமாகும். அவரே யாழ்ப்பாணத்திருச்சபைக்குத் தலைவர். கிறீஸ்துநாதரின் பிரதிநிதி. அவரே மறுகிறீஸ்துவாகிய குருவரை அபிஷேகிக்கிறவர். அவருக்கு வணக்கத்தையும், அமைச்சலையும் அபிஷேகம் பெறுகிறவர் வாக்குப்பண்ணுகிறார்.



## வேளாண்மையோ அதிகம்

வாலிபனே! உன்னுடைய திருஊழியத்தைத் தேவன் தேடுகிறார். யாழ்ப்பாண மேற்றிராசனம் எதிர்பார்த்திருக்கிறது. இங்கே திருச்சபையின் அபிவிருத்திக்காக நீயும்பாடுபடப் பின்வாங்காதே. தேவன் உன்னைத்தமது திருஊழியத்திற்கு அழைத்தால் மறுக்காதே. ஆயிரமாயிரமபேர் உன்சகோதரர். அவர்கள் கெட்டுப்போவதைத் தடுக்க உன்னால்கூடும். அவர்களை நல்லவழிப்படுத்த உன்னால்முடியும். வேளாண்மையோ அதிகம்; ஊழியரோ சொற்பப்பேர். வேளாண்மையின் எசமானுகிய தேவனைமன்றாடு. உன்னையும் தமதுஊழியரில் ஒருவனைக்சேர்க்கும்படிமன்றாடு. இப்பாக்கியத்தை அடைதற்காக உன்னாலியன்ற முயற்சி செய். தேவனுடையகிருபாகடாட்சம் உன்னையும்குருவாக்கி—உத்தமகுருவாக்கி உன்னால் அநேகஆத்துமங்களையும் இரட்சிக்கும்.

இவ்வருடம் அழைத்தலின்வருடம். அழைத்தலுக்காக நீ மன்றாடிவந்திருக்கிறாய். எங்கள் மேற்றிராசனத்தின் அரசியும், பாதுகாவலாளியுமாகிய மருதமடுச் செபமாலைமாதாவை மன்றாடிவந்திருக்கிறாய். அவளே எங்கள் மேற்றிராசனத்துக்குக் குருமாரை ஆயத்தப்படுத்தித் தருவாளாக. அவளுடையசுரூபம் அர்ச். மர்த்தீனார்குருமடத்தின்முற்புறமாக இப்பொழுதுநிறுவப்பட்டிருக்கிறது. மடுமாதாவின்உதவியால் நீயும்அந்தக்குருமடத்திற்சேர்ந்து ஓர்உத்தமகுருவாக வரலாம்.

மகாவந். மேற்றிராணிஆண்டவர் அவர்கள் கீழேதரப்பட்டுள்ள சிறுசெபத்தைச் சொல்வோருக்கெல்லாம் ஒவ்வோர்முறைக்கும் நூறுநாட்பலன் அளித்திருக்கிறார். **"மருதமடுச்செபமாலைமாதாவே! எங்கள்மத்தியில் பரிசுத்தரான தேவதொண்டர் அதிகரிக்கச் செய்தருளும்."**

## காவலூர்த் தபால்

தீவுப்பகுதியில் பெருமழைபெய்து எங்கும் வெள்ளமும், சகதியும், சதக்கலுமாய் இருக்கிறது. வெங்காயம் செய்கைபண்ணிய அநேகர் பெருமழையினால் நட்டமடைந்துள்ளனர். மேலும், நுளம்புகளின் தொல்லை பெரும் தொல்லையாய் இருக்கிறது. நுளம்புக்கடி பொறுக்கமுடியாதிருக்கிறது. இம்முறை இப்பகுதியில் நுளம்புகள் அதிகம்என்று பேசிக்கொள்ளப்படுகிறது. நுளம்புத் தடைமருந்து தெளிப்பதில் சுகாதாரப்பகுதி பின்னிற்பது வருந்தத்தக்கது. கூடிய விரைவில் நுளம்புத் தடைமருந்து தெளித்து நுளம்புத்தொல்லையைத் தீர்க்கும்படி சுகாதாரப்பகுதியைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**கல்லூரிப் பரிசளிப்பு விழா:**

ஊர்காவற்றுறை, அர்ச். அந்தோனியார்கல்லூரிப் பரிசளிப்புவிழா கடந்த 1-12-56 சனிக்கிழமை மாலை 6 மணியளவில் யாழ்ப்பாண மஜிஸ்றேற் திரு. பி. ஜி. எஸ். டேவிட் அவர்கள்தலைமையில் நடைபெற்றது. திருமதி டேவிட் பரிசில்களை வழங்கினார். அதன்பின் பாடசாலை மாணவரால் நத்தால் இரவுக்காட்சி, ஆபிரகாமின்பலி, மலர்ந்த வாழ்க்கை என்னும்காட்சிகள் நடித்துக் காண்பிக்கப்பட்டன.

**ஆசிரியர்களுக்குப்பிரியாவிடை:**

அர்ச். அந்தோனியார் கல்லூரியிலே விஞ்ஞான, கேத்திரகணித ஆசிரியராய்க் கடந்தபதினொருஆண்டுகளாகச் சேவைசெய்து ஏடினுக்கு இடம்மாறிப் போகும் ஆசிரியர் என். கொண்சேகா, பி. எஸ்சி. அவர்களுக்கும், நான்கு ஆண்டுகளாகச் சேவைசெய்து தாயகம் திரும்பும் ஆசிரியர் கே. ஏ. தோமஸ், பி. எஸ்சி. அவர்கட்கும் கல்லூரி ஆசிரியர்களாலும், மாணவர்களாலும் பிரியாவிடை விழாஒன்று சென்ற 30-11-56 வெள்ளியன்று சிறப்பாக நடத்தப்பட்டது. ஆசிரியர் கொண்சேகாஅவர்கள் கல்வித்துறையில் மாத்திரம்அல்ல, விளையாட்டுத்துறையிலும் அரியசாதனைகளை ஈட்டித் தந்திருக்கிறார். வடமாகாணக் கல்லூரிகளிலுள்ள விளையாட்டுப்பயிற்றும் முதன்மையான ஆசிரியர்களில் ஒருவராயும் விளங்கினார். இவர் தமதுகடமையை மிகமதித்தும், கணிதம், பௌதிகம் முதலாம்பகுதிகளில் மாணவர்களைத் திறமையாகப் பயிற்றியும், பாடசாலையில்இடம்பெறும் சகலகொண்டாட்ட வைபவங்களையும் திறமாகநிர்வகித்தும் வந்துள்ளார். அடுத்தபடியாக ஆசிரியர் தோமஸ்அவர்கள் கல்லூரிக்கு விஞ்ஞானப்பகுதியில் [illegible]பணி ஆற்றியுள்ளார். இவ[illegible]ன் சேவையை இழப்பது அர்ச். அந்தோனியார்கல்லூரிக்குப் பெரும்கஷ்டமாகும்.

**சேவைநலம் பாராட்டுவிழா:**

ஆசிரியர்கள் திரு. கொண்சேகா, திரு. தோமஸ்ஆகியோருக்குச் சேவைநலம் பாராட்டுமுகமாகக் காவலூர் வாலிபர்மன்ற அங்கத்தவராலும், கல்லூரிப் பழையமாணவர், சிநேகிதர், சனசமூகநிலைய நிர்வாகிகள் முதலியோராலும் ஊர்காவற்றுறைச் சனசமூகநிலைய மண்டபத்தில் ஓர்விழா சென்ற 2-11-56-இல் நடாத்தப்பட்டது. அதிலே அவர்களின் சேவைகளைப் பாராட்டி ஆசிரியர் எஸ். சாள்ஸ், ஆசிரியர் ஏ. திருநீலகண்டன், திரு. பி. யு. தியாகராசா, திரு. இராஅரங்கதாசன் ஆகியோர் பேசினார்கள். சிற்றுண்டி உபசாரணையுடன் விழாமுடிவடைந்தது. விழாவிற்கு மீன்பிடி ஐக்கியசங்க பரிசோதகரும், பழைய மாணவருமான திரு. எஸ். லீனஸ்அவர்கள் தலைமை வகித்தார்.

---

### யாழ்ப்பாண நகரசபைக் கத்தோலிக்க

# தொழிலாளர் சங்கம்

இச்சங்கம் எஞ்ஜினியர் திரு. வி. எஸ். முத்துமணிஅவர்கள் தலைமையிலே சென்றகார்த்திகைமாதம் 28-ந் திகதி புதன்கிழமை பிற்பகல்4-50 மணிக்கு யாழ்ப்பாண நகரமண்டபத்தில் கடவுள்வணக்கத்துடன் ஆரம்பமாயிற்று. அதிவண. ஈ. பொமிக்கோ, வண. ஜே. பிரான்சீஸ் குருவர்கள்இருவரும் அதிலே பிரசன்னராயிருந்தார்கள். திரு. வி. எஸ். முத்துமணிஅவர்கள் சங்கத்தைநிறுவுகையில் அதன் நோக்கத்தைப்பற்றியும், கத்தோலிக்க ஐக்கியத்தைப்பற்றியும் அதிகம்தெளிவாகவும், சுருக்கமாகவும் பேசினார். வண. பிரான்சீஸ்சுவாமியவர்கள் பேசியபோது, "நாம் எல்லாவகையிலும் கிறீஸ்துநாதரைப் பிரதிபிம்பிக்க வேண்டும்" எனும்விஷயம்பற்றி நீடியதோர் சொற்பொழிவு நிகழ்த்தினார். யாழ்ப்பாணமேற்றிராசன ஐக்கியசங்க தரிசகராகவந்திருந்த அதன் செயலாளர் திரு. லாசறஸ்அவர்கள், "நாம் கிறீஸ்துநாதரைஎப்படிப்பின்பற்றலாம்" என்பதுபற்றி விரிவாகஎடுத்துக்கூறினார். அதன்மேல் உத்தியோகஸ்தராகப் பின்வருபவர்கள் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

**ஞானத்தலைவர்:** வண. ஜோண் பிரான்சீஸ்சுவாமியார்.
**தலைவர்:** திரு. வி. எஸ். முத்துமணி.
**உபதலைவர்:** திரு. இ. எம். சித்தம்பலம்.
**காரியதரிசி:** என். போனிபஸ்.
**உபகாரியதரிசி:** } திரு. எஸ். என். யோசெவ்.
**தனாதிகாரி:** }

இன்னும் நிர்வாககுழுவினராகப் 12 அங்கத்தவர்கள் தெரிவுசெய்யப்பட்டார்கள். தேநீர் உபசாரணையுடனும், கடவுள்வணக்கத்துடனும் கூட்டம் இனிதேகலைந்தது. —நிருபர்

---

● மத்தியகிழக்கிலே சீரியாமீது படையெடுத்து அதன் அரசாங்கத்தைக் கவிழ்த்து, அந்நாட்டைப் பாக்டாட்நகர் ஒப்பந்தத்தின்கீழ் கொண்டுவரத் துருக்கி சதிபுரிந்துவருவதாய் எகிப்திய முன்னைநாள்மந்திரியான லெவ்ரினண்ட்-கர்னல் அன்வார்சாட் அதன்மீது குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ORDER NISI

IN THE DISTRICT COURT OF JAFFNA.

In the mater of the intestate estate of the late Bastiampillai Sinnappu of Atchuvely, Jaffna.

Testamentary Jurisdiction } No. 252. Deceased.

Bastiampillai Sinnappu Joseph of Ceylon Merchants Limited., Grand Bazaar, Jaffna.

Petitioner.

Vs.

1. Sinnappu Joseph Vethanayagam of Atchuvely presently at Colombo.
2. Bastiampillai Sinnappu Thiruchelvam of Atchuvely now at Cathedral Road, Jaffna.

minor 3. Felix Joseph Pushy Yakaren.

„ 4. Mary Charlotte Padmini.

„ 5. Mary Carmelita Rajakumari.

„ 6. Reginald Jeyatheswaran, the 3rd to 6th are children or Bastiampillai Sinnappu Anthonipillai.

G.A.L. 7. Mary Agnes Pushpam widow of B. S. Anthonipillai all of Atchuvely.

Respondents.

This mater coming on for disposal before P. Sri Skantha Rajah Esquire, District Judge, Jaffan on the 9th day of November, 1956 in the presence of Mr. J. Patrick Proctor for the petitioner and the affidavit of the petitioner dated 7th November, 1956 having been read:

It is ordered that the 7th respondent be appointed guardian ad litem of the minors the 3rd to 6th respondents and that the petitioner be declared entitled to have letters of administration of the estate of the abovenamed deceased and the same issued to him accordingly unless the respondents or others interested shall on or before the 10th day of December, 1956 appear before this court and show sufficient cause to the satisfaction of this court to the contrary.

And it is further ordered that the 7th respondent do produce the said minors in court on the said date.

This 9th day of November, 1956.
Sgd. P. SRI SKANTHA RAJAH,
District Judge.

---

## யாழ்ப்பாணம் நகரசபை

### 1947-ம் ஆண்டின் 29-ம் இலக்க நகரசபைச் சட்டம்

**யாழ்ப்பாணம் நகரசபை இத்தாலறியத் தந்திருக்கின்றதாவது:**

1. 1947-ம் ஆண்டின் 29-ம் இலக்க நகரசபைச்சட்டத்தின் 245 (1)ம் பிரிவின் கீழ் இங்கே காணவரும் நாமாவளியிலுள்ள வண்டிகள், மிருகங்களுக்கு 1957-ம் ஆண்டுக்குரிய வரிகள் விதிக்கப்பட்டிருக்கின்றன.

2. அச்சட்டத்தின் 246 (1)ம் பிரிவின் கீழ் குறித்த வரிகள், (31-3-57 ஞாயிற்றுக்கிழமையா யிருப்பதால்) 1957-ம் ஆண்டு சித்திரைமாதம் 1-ந் திகதி (1-4-57) அல்லது அதற்குமுன் கொடுக்கப்பட வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கின்றது.

3. 1947-ம் ஆண்டின் 29-ம் இலக்கச் சட்டத்தின் 245-246-ம் பிரிவுகளின் கீழ் எல்லாவண்டிகள், மிருகங்கள் என்பவற்றின் வரிகள், (31-3-57 ஞாயிற்றுக்கிழமையா யிருப்பதால்) 1-4-57 பிற்பகல் 3 மணிக்கு அல்லது அதற்குமுன் கொடுக்கப்பட வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கின்றது. அத்திகதியின்பின் கொடுக்கப்படும் வரிகள் 1947-ம் ஆண்டின் 29-ம் இலக்க நகரசபைச்சட்டத்தின் 252-ம், 255-ம் பிரிவுகளின்கீழும், நகரசபையின் உபவிதிகளுக் கிணங்கவும் 10 வீத பிடிகட்டளைப்பணம் மேலதிகமாகக் கூட்டிக்கொடுக்க வேண்டியதாகும்.

4. 1947-ம் ஆண்டின் 29-ம் இலக்க நகரசபைச் சட்டத்தின் 245-ம், 246-ம் பிரிவுகளின்படி வரிகொடுக்க வேண்டிய வண்டிகள், மிருகங்கள் எல்லாவற்றின் வரிகளும் விதிக்கப்பட்டபடி கொடுக்கப்படாவிட்டால், நகரசபை அதிகாரம் கொடுத்துள்ள ஒரு உத்தியோகத்தரால் குறித்த வண்டிகள், மிருகங்கள் பிடிக்கப்படக் கூடியவையாகும்.

**நாமாவளி**

| | |
|---|---|
| மோட்டார் வண்டி, மோட்டார் திரிசக்கரவண்டி, மோட்டார் பாரவண்டி, மோட்டார் துவிசக்கரம். வண்டி, தள்ளுவண்டி (Hand Cart), கைவண்டி (Jin-ricksha), துவிசக்கரம், திரிசக்கரம். அல்லாத ஒவ்வொரு வண்டிக்கும். | ரூ. ச. 5-00 |
| துவிசக்கரம் அல்லது திரிசக்கரம் அல்லது துவிசக்கர மோட்டார் அல்லது வண்டி (Bicycle Car or Cart) அல்லது திரிசக்கர மோட்டார் அல்லது வண்டி (Tricycle Car or Cart) ஒவ்வொன்றுக்கும் | |
| (அ) வியாபாரத்துக்கு உபயோகித்தால் | 5-00 |
| (ஆ) வியாபாரமல்லாத பிறவற்றுக்கு உபயோகித்தால் | 1-00 |
| ஒவ்வொரு வண்டிக்கும் | 4-00 |
| ஒவ்வொரு தள்ளுவண்டிக்கும் | 4-00 |
| ஒவ்வொரு கைவண்டிக்கும் | 2-50 |
| ஒவ்வொரு குதிரை, மட்டக் குதிரை அல்லது கோவேறு கழுதைக்கும் | 5-00 |
| ஒவ்வொரு மாட்டுவண்டி அல்லது கழுதைக்கும் | 1-00 |

ஏ. வி. சின்னையா,
நகரசபைக் காரியாதிகாரி.

நகரசபைக் கந்தோர்,
யாழ்ப்பாணம்.
23-11-56

* * *

## யாழ்ப்பாண நகரசபை
### 1957-ம் ஆண்டு நாய்ப்பதிவுப் பணம்

**நாய்ப்பதிவுச்சட்டம் 334-ம் அத்தியாயம்**

யாழ்ப்பாண நகரசபை எல்லைக்குள் வைத்திருக்கும் ஒவ்வொரு நாய்க்கும் ரூபா 2-50. ஒவ்வொரு பெண்நாய்க்கும் ரூபா 3-50. நாய்ப்பதிவுச் சட்டத்தின் 4-ம் பிரிவின்படி (334-ம் அத்தியாயம்) 1957-ம் ஆண்டுக்குப் பதிவுப்பணமாக யாழ்ப்பாணம் நகரசபை விதித்திருக்கிறதென்றும், அது 1957-ம்ஆண்டு சித்திரை மாதம் 1-ந் திகதி (1-4-57) அல்லது அதற்குமுன் கொடுக்கப்பட வேண்டும் என்றும இத்தால் யாவரும் அறிவிக்கப்படுகின்றனர்.

ஏ. வி. சின்னையா,
நகரசபைக் காரியாதிகாரி.

நகரசபைக் கந்தோர்,
யாழ்ப்பாணம்.
23-11-56

---

### நேர்த்தியின் பூர்த்தி

காணுமற்போனபொருள் அர்ச். அந்தோனியாரிடம் வேண்டிக்கொண்டதன் பயனுக கிடைத்தது. அவருடைய நாமம் புகழப்படுவதாக.

மாத்தலன் இ. ரேசலின்

* * *

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

திரு இருதய நாதரின் இரக்கத்தினுலும், பரிசுத்த தேவதாயாரினதும், அர்ச். அந்தோனியாரினதும் மன்ருட்டினுலும் நான் கேட்ட நன்மைகள் கிடைக்கப்பெற்றேன். என் முழு இருதயத்தோடும் நன்றியறிந்த ஸ்தோத்திரம் செலுத்தி, நேர்த்தியின்படி இதைப பிரசுரிக்கிறேன்.

பக்தன் மரியதாஸ்

---

## Jaffna Municipal Council

**Supplementary Budget No. 4 of 1954**

NOTICE is hereby given in terms of Section 214 (2) (b) of the Municipal Councils Ordinance No. 29 of 1947 that the Supplementary Budget No. 4 of the Jaffna Municipal Council for the year 1954, will be open for public inspection at the Municipal Office, Jaffna, for seven days commencing from 10th December, 1956.

S. S. NAVARATNAM,
Mayor,
Jaffna Municipal Council.

Municipal Office,
Jaffna, 1-12-56.

* * *

## Jaffna Municipal Council

**Supplementary Budget No. 3 of 1955**

NOTICE is hereby given in terms of Section 214 (2) (b) of the Municipal Councils Ordinance No. 29 of 1947 that the Supplementary Budget No. 3 of the Jaffna Municipal Council for the year 1955, will be open for public inspection at the Municipal Office, Jaffna, for seven days commencing from 10th December, 1956.

S. S. NAVARATNAM,
Mayor,
Jaffna Municipal Council.

Municipal Office,
Jaffna, 1-12-56.

* * *

## Jaffna Municipal Council

**Supplementary Budget No. 2 of 1956**

NOTICE is hereby given in terms of Section 214 (2) (b) of the Municipal Councils Ordinance No. 29 of 1947 that the Supplementary Budget No. 2 of the Jaffna Municipal Council for the year 1956, will be open for public inspection at the Municipal Office, Jaffna, for seven days commencing from 10th December, 1956.

S. S. NAVARATNAM,
Mayor,
Jaffna Municipal Council.

Municipal Office,
Jaffan, 1-12-56.

* * *

## Jaffna Municipal Council

**Budget — 1957**

NOTICE is hereby given in terms of Section 212 (b) of the Municipal Councils Ordinance No. 29 of 1947 that the Budget of the Jaffna Municipal Council containing an estimate of the available Municipal income and details of the proposed expenditure for the year 1957, will be open for public inspection at the office of the Municipal Council for seven days commencing from 10th December, 1956.

S. S. NAVARATNAM,
Mayor,
Jaffna Municipal Council.

Municipal Office,
Jaffna, 1-12-56.

---

### நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

கிறிஸ்துராசாவின் இரக்கத்தாலும், அர்ச். சதாசகாய மாதாவுடையவும், அர்ச். அந்தோனியாருடையவும் மன்ருட்டாலும் என்சந்ததியில்உள்ள கலவரங்கள் அடங்கிச் சமாதானம் உண்டானதற்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செலுத்துகிறேன். இன்னும் பூரண சமாதானம் உண்டாகவும், எனது குழந்தைகள் சுகம்பெறவும் வேண்டிக் கொள்ளுகிறேன்.

திரிகோணமலை D. R. Davidpillai

* * *

யேசுவின் திருஇருதய அனுக்கிரகத்தினுலும், சதாசகாயமாதாவின் மன்ருட்டினுலும், வண. பிரான்சிஸ் கரேட்சகோதரரின் வேண்டுதலினுலும், எனது தெரிவுப்பரீட்சையில் சித்தியெய்திய தற்காக இவர்களுக்கு என்மனமார்ந்த நன்றி செலுத்துகிறேன். அடுத்துவரும் பரீட்சைகளிலும் பூரணசித்தியடைய அருள்புரிய வேண்டுமென்றும் மன்ருடுகிறேன்.

கல்முனை. E. P. A.

* * *

பரிசுத்த சதாசகாயமாதாவிடம் நாங்கள் கேட்டுக்கொண்டபடி எங்கள்மகள் ஆடியில்நடந்த S. S. C. பரீட்சையில் திறமையாய்ச் சித்திஅடைந்ததற்கும், 3வருடகாலமாய்ப்பிடித்திருந்த வயிற்றுக்கோளாறு அதிசயத்துக்குரியவிதமாய்ச்சொஸ்தமாகியதற்கும், எங்கள் நேர்த்திப்பிரகாரம் இதனைப்பிரசுரிப்பதன்மூலம் எங்கள்நன்றியறிதலை அத்திருத்தாயாருக்குச் சமர்ப்பிக்கின்ருேம். இன்னும் எங்கள் பரிசுத்ததாயார் எங்கள்மேலிரங்கி எங்கள் மன்ருட்டங்களையெல்லாம் பெற்றுத்தந்து எங்களை இன்னும் ஆசீர்வதிக்குமாறு தமதுதிருக்குமாரனிடம்பரிந்து பேசுவாளென்று நம்புகின்ருேம். பரிசுத்தசதாசகாயமாதாவே! ஓயாமல் எங்களுக்கு உதவிசகாயமாய் இருந்தருளும்.

பேசாலை Mr. L. M. செபமாலை

* * *

எனதுபேரன் கடுமையான வருத்தத்தால் வருந்தினுன். அர்ச். செப்ஸ்தியாரிடம் மன்ருடினேன். சுகம் கிடைத்தது. அவர் நாமம் புகழப்படுவதாக.

மாத்தலன் இ. ரேசலின்

---

### முதல் வெள்ளி முதற் சனி

—*—

**வருகிற 7-12-56 வெள்ளிக்கிழமை முதல்வெள்ளி–மறுநாள் முதற்சனி**

தொடர்பாக ஒன்பதுமாதங்களிலே முதல்வெள்ளிக்கிழமை தோறும் திவ்வியநன்மை வாங்குகிறவர்களுக்குப் பாக்கியமான மரணமடையும் வரப்பிரசாதத்தை அருள்வதாக நமது திவ்வியகர்த்தர் வாக்களித்திருக்கிருர்.

தொடர்பாக ஐந்துமாதங்களிலே முதற்சனிக்கிழமை தோறும் திவ்வியநன்மைவாங்கித்தேவஇரகசியங்களைத்தியானித்துக்கொண்டு 15 நிமிஷநேரம் செபமாலை செபிக்கிறவர்களுக்கும் அதேவாக்குத்தத்தத்தைப் பரிசுத்த தேவதாயார் அளித்திருக்கின்ருர்.

---

**மௌனமே மங்கையருக்கு மேன்மையான மணியாரம். ஆனுல், அணிந்தால் அல்லவோ!**

---

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, December 6-1956.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனித வீரர்



## வெள்ளிச் செபமாலை

(முன்தொடர்ச்சி)

பெயிற்றன்பிரபுவின் பிரேதம் லண்டன்நகரின் பிரதான வீதிகள்வழியே ஏராளமான சனங்கள் புடைசூழத் துக்க கீதங்கள் மத்தியில் கொண்டுசெல்லப் படடபோது நமது இளைஞன் கென்றட், லண்டன்நகரின் பிரசித்த சிறைக்கூடத்தின் இரும்புத் திரைக்குப் பின்னால் நின்று, இரும்புக் கம்பிகளினூடே பிரேத ஊர்வலத்தைப் பார்த்துக் கண்ணீர் வடித்துநின்றான். கொலைக்குற்றவாளி யாரென்பது அவனுக்கு ஆச்சரியத்தை வருவித்தது. தான் குற்றவாளி அல்லஎன்பது நீதிஸ்தலத்தில் ஏற்றுக் கொள்ளப் படாதது அதைவிட ஆச்சரியத்தை வருவித்தது. தான் இத்துணை பயபக்தியான சீவியம்நடத்தியும், தாயாரின் புத்திக்கிணங்கித் தினமும்தவறாது செபமாலை ஓதிவந்தும் இத்துணை நிர்ப்பாக்கிய ஸ்திதியைத் தான் அடைய நேர்ந்ததே என்னும் கவலை இவைஎல்லாவற்றையும் மேற்கொண்ட ஆச்சரியத்தை வருவித்தது. ஆயினும், தேவதாய் மட்டில் அவநம்பிக்கையோ அன்றேல் வெறுப்போ அவனது உள்ளத்தை நெருங்கவில்லை. எனவே, தனது தேவ அன்னையை நினைத்துச் செபமாலையைக் கையிற்கொண்டு சிறைக்கூடத்தின் ஓர் மூலையில்போய் உட்கார்ந்தான்.

கென்றட், இதுவரையும் தன்பெற்ற தாய்க்கு எதுவிதமானசெய்தியும் அனுப்பாததினால். இனிமேல் பொறுத்திருப்பது அவளுக்குச் சஞ்சலத்தை வருவிக்கும் எனஎண்ணி, சம்பவம் முழுவதையும் நண்பர்ஒருவர்மூலம் தனது நேச அன்னைக்குத் தெரிவித்தான். இதை அறிந்ததாய் எந்தநிலையில் இருந்திருப்பாள் என்பதைத் தாயுள்ளம் படைத்த யாவரும் அறிவர். அவள் கணமேனும் தாமதியாது உடனேதானே விமான மூலம் லண்டன்நகர்செல்லப் புறப்பட்டாள்.

அங்கு சிறைக்கூடத்தில் தாயும், மகனும் சந்திக்கின்றனர்........... வெள்ளிச் செபமாலை நடுவேநின்று காக்காவிடில் ........... சிறிதுநேரம் மௌனம்........... மகனே! 'நம்பிக்கையாய் இரு' என்று சொல்லிப் புறப்பட்ட தாய், பக்கத்திலிருந்த கோயிலுக்குள் சென்று, தேவதாயின் சுரூபத்தின்முன் சாஷ்டாங்கமாய்விழுந்து, "அம்மா! தாயே! நீர் உமதுமகனின்பிரிவால்அடைந்ததுயரை நானும் அடையப் பாக்கியம் பெற்றேன். அவ்வாறே உயிர்த்த உமது மகனைக் கண்டு நீர் அடைந்த ஆனந்தத்தையும் அடியாளும்காணச்செய்தருளும். தாயே! என்மகனை எனக்குத்தாரும். என்மகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாவிடில் நான் உயிர்வாழச் சகியாதே'' என்று துயரமும், நம்பிக்கையும் ஒன்றுசேர மன்ருடினுள்.

கென்றட்டின் விசாரணைத்தினம் வந்தது. வழக்கைப் பார்க்கவும், தீர்ப்பைக் கேட்கவும் கூடியிருந்த சனத்திரளால் நீதிஸ்தலம் நிறைந்திருந்தது. பெயிற்றன் பிரபுவின் பாரியாரும், றெனியும், மற்றும் இனசனரிற் பலரும் ஆசனங்களில் உட்கார்ந்திருந்தனர். விலங்கிடப்பட்ட கென்றட் பொலிஸ் பாதுகாப்புடன் தலைகுனிந்தவனுய் நீதிஸ்தலத்துக்குக் கொண்டுவரப் பட்டான். அங்கு கூடியிருந்த அனைவரும் அவனையே பார்த்தவண்ணமாய் இருந்தனர். ஆ! நம்பிக்கையோடு கூடிய புன்சிரிப் பொருந்திய அவனது வதனம்............ நீதிஸ்தலத்தின் ஓர்மூலையில் செபமாலை ஓதிக்கொண்டு தனது மகனின் தீர்ப்பைக்கேட்கக் காத்திருக்கும் அவனது தாய்............விசாரணை ஆரம்பமானது. நீதிபதிகேட்ட ஒவ்வொரு வினவிற்கும் கென்றட் ஒரேதன்மையாக, அமைதியோடு உரைத்தபதில் அனைவரையும் பிரமிக்கச் செய்தது. இந்தக் கொலையில் தான் எதுவிதத்திலும் குற்றவாளி அல்ல என்று அடுத்தடுத்துச் சொன்னுன். ''கென்றட் கொலைக்குற்றவாளி'' என்பதை நிரூபிக்க றெனி எல்லா விதத்திலும் முயற்சித்தான். தேவசமூகத்தில் கென்றட் சுற்றவாளியாய் இருந்தபோதிலும், நீதிஸ்தலத்தில் அவ்விதம் காணப்படவில்லை.

மூன்றுநாட்களாகத் தொடர்ந்து நடைபெற்ற இந்தவழக்கு ஓர்மாசற்ற இளைஞனுக்குமரணத்தையும், அவனது அன்னைக்குச்சொல்லிலடங்காத் துயரத்தையும் வருவிக்கும்படியாய் முடிவுற்றது. தீர்ப்பைஎழுதப் பேனையைஎடுத்த நீதிபதி கென்றட்டைப்பார்த்து, ''ஏதாவது சொல்ல உண்டா?'' என்று கேட்டார். அதற்குக் கென்றட் அழுகையோடு ''ஆண்டவனே! நான் பெயிற்றன் பிரபுவைக் கொல்லவில்லை. அவர் என்னைப் பிதாவுக்குரிய அன்போடு பாதுகாத்தவர். நானும் அவரைப் புத்திரபாசத்தோடு நேசித்தேன். எனவே, இந்தக் கொலையில் நான் குற்றம் அற்றவனுய் இருக்கிறேன். எனதுவாக்கை ஏற்றுக் கொள்ளாது, என்னைக் குற்றவாளியாக்கக் கருதுவீர்களாகில் உங்கள் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாய் இருக்கிறேன்'' என்றுசொல்லி இருகரங்களாலும் தனது வெள்ளிச் செபமாலையை மார்போடணைத்து, தலைகுனிந்தான். அவனது இருகண்களாலும் வடிந்தகண்ணீர், வெள்ளிச் செபமாலையை ஊடறுத்து நிலத்தில் விழுந்தது. நீதிபதி ஓர் கறுப்புத் தலைமூடியை இட்டுக் கொண்டு ''குற்றவாளியே! பெயிற்றன் பிரபுவைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்ற குற்றத்திற்காக இன்னும் ஒரு மாசத்தால் நீயும் சுட்டுக்கொல்லப் படுவாய்'' என்று தீர்ப்பை வாசித்தார். நீதிஸ்தலம் ஒரேமௌனம்........... அவனது தாயார் மூர்ச்சித்து விழுந்தாள். கென்றட் கொல்லப்படும் நாள்வரையும் சிறைச்சாலையில் இருந்தான்.

(தொடரும்)

## ஒருமுறையில் ஒருநாள்

ஒவ்வொருநாளின் சிறுசீவியம்.........
காலை, மதியம், மாலையைக் கொண்டது.........
ஒருமுறையில் ஒருநாளே சீவிக்கிறேம்.........
நினைவிலிருத்த அதிகமில்லை ... ... பின்பு.
நெடுந்தூரம் பயணஞ்செய்தவன் போல ... ..
ஒரு மைலுக்குப்பின் அடுத்தமைல்......
தூரம் தோன்ருப் பயணம் ... ... ...
சீவியத்தைச் சிறப்பாய் நடத்தும்வழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அண்ணு சொல்லுவது

அருமைச் சகோதரங்களே !

குரு தண்ணீரை ஆசீர்வதிக்கும் பொழுது, அது பாவிக்கப்படும்பொழுது பிசாசு அகலவும், எமக்கு இடையூறு வராமலும் இருக்க மன்ருடுகிருர். ஆசிநீர் வல்லபமுள்ள அருட்கருவி. அதை உபயோகிக்கும் பொழுது திருச்சபை செபத்தில் கேட்ட நன்மைகளை நாமும் விரும்புகிருேம்.

எமது கோயில்களில் ஆசிநீர்த்தொட்டிகள் உண்டு. அதுபோல வீடுகளிலும் நாம் வைத்திருக்க வேண்டும். வாசலடியில் வைத்திருக்கலாம். வீடுகளில் ஆசிநீரை உபயோகிக்கும் பழக்கத்தை நீங்கள் அனுசரிக்க வேண்டும். வீட்டைவிட்டு வெளியே செல்லும் போதும், திரும்பும் போதும் ஆசிநீரை உபயோகியுங்கள்.

வீட்டைவிட்டு வெளியேறும்போது பாவத்தை விலக்கும் உறுதியான எண்ணத்துடன் புறப்படுங்கள். ஆசிநீர் தொட்டுச் சிலுவை அடையாளம் வரைந்து கொள்ளுங்கள். வீட்டிற்குத் திரும்பும்பொழுது உங்கள் பாவக்கிருமிகளை ஆசிநீரால் கழுவிவிடுங்கள்.

இது கத்தோலிக்க பழக்கங்களில் ஒன்று. நல்ல கத்தோலிக்கராகச் சீவிக்க நினைவும், ஊக்கமும் ஊட்டும்.

## சிறந்த செல்வம்

பணம், பெருமை, புகழ், முகஸ்துதி முதலியனவே உலகத்தில் பெரியதாக எண்ணப்பட்டு வருகின்றன. இவை ஒன்றுமே இல்லாத இளைஞன் ஒருவன் இருந்தான். வறுமை என்னும்நோய் இவனைப் பிடித்து வாட்டியது. இதனுல், இவன் எப்போதும் கவலைதோய்ந்த முகத்துடன் இருந்தான்.

ஒருநாள் நகர்வீதி ஒன்றின்வழியே இவன் போய்க்கொண்டிருந்தபோது, தன்னுடைய முன்னுள் ஆசிரியரைச் சந்தித்தான். அவர் இவனைக் கண்டதும், "தம்பி, சுகமாய் இருக்கிருயா?" என அன்புடன் வினவினுர்.

அதற்கு இளைஞன், "ஐயா, நான் கொடிய ஏழ்மையென்னும், நோயினுல் பீடிக்கப்பட்டுக் கஷ்டப்படுகிறேன்" என்ருன்.

இதைக்கேட்ட அந்த நல்லாசிரியர், அனுதாபத்துடன் தலையைச் சிறிது அசைத்தார். மேலும், "தம்பீ, உண்மையில் நீ ஒருஏழை அல்ல; உன் உடலைப் பார்; எவ்வளவு உரமுள்ளதாய் இருக்கிறது; நீ ஆரோக்கியம் உள்ளவனுய் இருக்கிருய்; இதைவிடப் பெரிய செல்வம் கிடையாதப்பா!" என்ருர்.

பின்னும் அவர், அவனுடைய திரண்டுருண்ட வலிமையான கரத்தைத் தம் கைகளில் பிடித்து, "இந்த உனது வலிமைவாய்ந்த கையை, ஐந்நூறு ரூபாவுக்குக் கொடுப்பாயா?" என்று கேட்டார்.

உடனே வாலிபன், "எவ்வளவுபணம் கொடுத்தாலும், நான் ஒருபோதும் என் கையை இழக்கச் சம்மதியேன்" என்ருன்.

"அப்படியானுல், இன்னும் அதிகமான பணம் தருகிறேன். உன் உரம்பெற்ற கால்களில் ஒன்றைக் கொடுக்கிருயா?"

"முடியாது ஐயா" எனச் சிறிது சினத்துடனேயே கூறினுன் கட்டிளங்காளை.

"சரி, அரசாங்க பொக்கஷத்திலுள்ள ஐஸ்வரியங்கள் எல்லாவற்றையும் உனக்குக் கொடுத்தால் உன் ஒளிவீசும் கண்களைக் கொடுப்பாயா?" எனக்கேட்டார் ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எண்ணுயிரம் அரசர்களுடைய கருவூலங்களையெல்லாம் என்முன் கொண்டு வந்து கொட்டினுலும், நான் என் சரீரத்தில் சிறுபாகத்தை ஆனுலும் இழக்கச் சம்மதியேன்" எனப் படபடப்புடன் கத்தினன் இளைஞன்.

"இப்போது வழிக்குவந்தாயா! பின் ஏன் உன்னை ஏழை என்று கூறிக் கொண்டே ஏங்குகிருய்? நீதான் செல்வங்களில் சிறந்த செல்வமான உடலாரோக்கியத்தை உடையவனுய் இருக்கிருயே?" என்ருர் அந்த நல்லாசிரியர்.

"தனிப்பெரும் செல்வம் தேகாரோக்கியம்" என்பது பழமொழி அல்லவாயினும், இம்மொழி எவ்வளவு சரியாக உண்மையை விளக்குகிறது.

---

குழந்தை ஒலி (1)

## நல்லபிள்ளையாக வாழ்வதற்கு

உயர்ந்த பொருளைத் தந்தாலும்
உலகே திரண்டு வந்தாலும்
உயிரே போக நேர்ந்தாலும்
உரைக்க வேண்டாம் பொய்யினை.

●

கையிற் பணமே ஒழிந்தாலும்
கடின பசியே வளர்ந்தாலும்
கண்ணுக் கழகாய் இருந்தாலும்
கருத வேண்டாம் களவினை.

●

வயதில் மூத்த பெரியார்க்கும்
வளர்க்கும் தாயார் தந்தைக்கும்
வாய்மை உள்ள குருவுக்கும்
வணக்கங் கூற மறவாதே.

●

உள்ளார் இல்லார் என்பார்க்கும்
உருவில் பெரியார் சிறியார்க்கும்
உயர்வு தாழ்வு எண்ணு(து)தே
ஒன்றே நீதி மறவாதே.

அயலார் நன்மை இகழ்ந்தாலும்
அன்பு செய்ய மறந்தாலும்
என்ன கேடு புரிந்தாலும்
எண்ண வேண்டாம் தீமையையே.

---

## கூலிக்காரன்

யோசேப்புவும், மாணிக்கமும் ஒரே பாடசாலையில் படித்தார்கள். ஒரேவகுப்பில் படித்தார்கள். யோசேப்பு கடவுள் பக்திஉள்ளவன். தினந்தவருமல் கோவிலுக்குப் போவான். கிரமந்தவருது பாடசாலைக்குச் செல்வான். நல்லொழுக்கம் உள்ளவன்.

மாணிக்கம் ஒழுங்கு இல்லாதவன் ஒழுக்கம் இல்லாதவன். பாடசாலைக்குப் போவதென்ருல், படிப்பென்ருல் அவனுக்குக் கசப்பு. விளையாட்டுகளிலும், வேடிக்கைகளிலும் தன் காலத்தை வீணுக்கிவந்தான்.

பலவருடங்கள் ஓடிமறைந்தன. ஒரு நாள்காலை யாழ்ப்பாணப் புகையிரதஸ்தானத்தில் வண்டிவந்து நின்றது. அழகாக உடைதரித்த கனவான் ஒருவர் இரண்டாம் வகுப்புப் பெட்டியிலிருந்து இறங்கினுர். கூலிக்காரன் ஒருவனை அழைத்துத் தான்கொண்டுவந்த பொருட்களைத் தூக்குமாறு கட்டளையிட்டார். கூலிக்காரன் சாமான்களைத் தூக்கித் தலையிலே சுமந்துகொண்டு பின் செல்ல, அவர் முன்னேசென்ருர்.

குழந்தைகளே! அந்தக் கனவான் யார் தெரியுமா? இளமையிலே தன் காலத்தைப் பொன்னுக மதித்து, திறமாகப் படித்து இப்போது நல்ல உத்தியோகம்பார்க்கும் யோசேப்பு. அந்தக் கூலிக்காரனைப் பார்த்தீர்களா? அவன்தான் மடையன் மாணிக்கம். கல்வியின் அருமைதெரியாமல் காலத்தைவீணுக்கி இப்போது கஷ்டத்தை அனுபவிக்கிருன்.

"கற்ருேர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org